பக்கங்கள்: 12
விலை : 30/-
காலைக்கதிர்
Kalaikkathir
விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 16 செவ்வாய்க்கிழமை 30.06.2020 கதிர் 237

## இனி அது ரகசியம் அல்ல!

தம் தலைமைத்துவத்தின் உறுதியை வெளிப்படுத்தியிருக்கின்றார் மாவை சேனாதிராசா.

ஒரு நெருக்கடியான கட்டத்தில், பக்கம் சாராமல் – தன் தனிப்பட்ட விருப்பு, வெறுப்புகளை எல்லாம் ஒதுக்கிவைத்து விட்டு தனது தலைமைத்துவத்

பக்கம் 02 »

## கோட்டா – மஹிந்த ஆட்டம் ஜூலை 3 முதல் ஆரம்பம்!

கொழும்பு, ஜூன் 30

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் கலந்து கொள்ளும் ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஜூலை 3ஆம் திகதி முதல் நாடு தழுவிய ரீதியில் ஆரம்பமாகின்றது.

ஜனாதிபதியின் கொள்கைத் திட்டங்களைச் செயற்படுத்தும் பலமான அரசை அமைப்பது தொடர்பில் மக்கள் கவனம் செலுத்த வேண்டும் எனப் பொது ஜன முன்னணியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

பொதுஜன பக்கம் 02 »

## வடக்கு மக்களின் வாழ்க்கைத் தரம்; பிரதமருடன் மாகாண ஆளுநர் பேச்சு




கொழும்பு, ஜூன் 30

கொரோனா பெருந்தொற்றுப் பரவல், நாடளாவிய முடக்கம் ஆகியவற்றின் வடக்கு மக்களின் வாழ்வாதார மேம்பாடு குறித்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸுக்கும் இடையில் இடம் பெற்ற பக்கம் 02 »

# வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை கைவிடுவதாக நாம் அறிவிக்கவில்லை

## நீதியரசர் விக்கி பிரகடனம்



மல்லாகம், ஜூன் 30

மக்கள் ஆணையான வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை கைவிடுவதாக நாம் அறிவிக்கவில்லை. நாம் அதனால்தான் நேற்றையதினம் (சனியன்று) எமது அங்குரார்ப்பண தேர்தல் கூட்டத்தை அந்தத் தீர்மானத்தை இயற்றிய இடத்தில் – வழுக்கம்பரை அம்மன் கோயில் முன்றிலில் – வைத்தோம். அன்று எடுத்த வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் உள் அர்த்தம் 44 வருடங்களுக்குப் பிறகும் உண்மையை உணர்த்துவதாக அமைந்துள்ளதாக நாங் கள் காண்கின்றோம்.

– இவ்வாறு பகிரங்கமாக அறிவித்திருக்கின்றார் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன். பக்கம் 11 »

## சர்வதேச சதித்திட்டம் தொடர்பில் மஹிந்த விளக்கமளிக்க வேண்டும்

### ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

கொழும்பு, ஜூன் 30

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்டுள்ள விசேட அறிவிப்பில் சர்வதேச சதித்திட்டம் தொடர்பில் குறிப்பிட்டிருந்தார். அது எவ்வகையான சதித்திட்டம் என்பதை அவர் நாட்டுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமை பக்கம் 02 »

## கைது செய்யப்பட்ட 4 பொலிஸாரும் பணி நீக்கம்

கொழும்பு, ஜூன் 30

போதைப்பொருள் கடத்தல்காரர்களுடன் தொடர்பில் இருந்து, கைப்பற்றப்பட்ட போதைப்பொருள்களில் ஒரு பகுதியைகடத்தல்காரர்களுக்கே மீள விற்பனை செய்தனர் என்று கூறப்பட்ட விடயத்தில் பி.என்.பீ. பக்கம் 02 »

## புலிகளின் போராட்டம் புத்துயிர் பெற விடோம்

### பதிலடி கொடுக்க இராணுவத்தினர் தயார் என்கிறார் சவேந்திர சில்வா

கொழும்பு, ஜூன் 30

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் மீண்டும் உயிர்ப்பெறவாய்ப்பில்லை. அவ்வாறான ஆயுதப் போராட்டம் ஒன்று உருவாக ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை, ஆனால், முயற்சிகளை எடுக்க முடியும் என்ற சந்தேகம் எம்மத்தியில் உள்ளது.

– இவ்வாறு இராணுவத் தளபதி லெப்டினன்ட் பக்கம்02 »

## 'மொட்டு' அணிக்கு மஹிந்த வாய்ப்பூட்டு

### கருணா தொடர்பில் கருத்துத் தெரிவிக்கக்கூடாதாம்

கொழும்பு, ஜூன் 30

முன்னாள் பிரதி அமைச்சர் கருணா என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனின் சர்ச்சைக்குரிய உரை தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்க வேண்டாம் என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் உறுப்பினர்களிடம் அந்தக் கட்சியின் தலைவரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வேண்டுகோள் விடுத்துள்ளார்.


– இவ்வாறு பக்கம் 02 »

## வாக்களிப்புக்கான நேரம் அதிகரிப்பு; இன்று முடிவு

கொழும்பு, ஜூன் 30

பொதுத் தேர்தலில் வாக்களிப்பு நேரத்தை அதிகரிப்பது குறித்து இன்று நடைபெறவுள்ள தேர்தல்கள் ஆணைக் குழுவின் கூட்டத்தில் முடிவு செய்யப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த பக்கம் 02 »

## அம்மானை அடையுங்கள்! கொந்தளிக்கும் பிக்குகள்



விநாயகமூர்த்தி முரளிதரன் (கருணா) இலங்கை சட்டங்களை மீறியுள்ளமையால் அவரைத் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கக்கூடாது என ஓமல்பே சோபித தேரர் தேர்தல்கள் ஆணையாளரிடம் வலியுறுத்தியுள்ளார். பக்கம் 02 »

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தனித்துவத்தை வெளிப்படுத்தியிருக்கின்றார்.

இலங்கைத் தமிழரசுவின் யாழ். மாவட்ட மகளிர் அணி என்ற பெயரில் ஒரு சில தினங்களுக்கு முன்னர் அடாத்தாக – அபாண்டமாக – ஆதாரம் ஏதுமின்றி – திருகுதாள அறிவிப்பு விடுத்த அம்மணிமார் நான்கு பேர் விடயத்திலும் கட்சி ரீதியாக விரைந்து கடும் நடவடிக்கை எடுப்பதற்கு செயலாளருக்குப் பரிந்துரைத்திருக்கும் மாவை சேனாதிராசாவின் நடவடிக்கை கட்சி மீதான நம்பிக்கையையும் மீளக் கட்டி எழுப்பியிருக்கின்றது எனலாம்.

‘எடுப்பார் கைப்பிளையாக’ தமிழரசை இயக்க முடியாது என்ற செய்தியை இவ்விடயத்தை ஒட்டி கட்சியின் செயலாளருக்கு கடிதம் எழுதி, அந்தக் கடிதத்தைப் பகிரங்கப்படுத்தியமை மூலம் கட்சியினருக்கு அறிவுறுத்தியிருக்கின்றார் கட்சித் தலைவர்.

கட்சி என்ற கட்டுக்கோப்பை மீறி, கட்டறுந்து அலையும் கட்சியினர் பலருக்கும் ஓர் அச்சுறுத்தல் எச்சரிப்பை இந்த உறுதியான நடவடிக்கை மூலம் மாவை சேனாதிராசா விடுத்திருக்கின்றார்.

இந்தக் கடும் போக்கை ஆரம்பம் முதல் அவர் கடைப்பிடிக்கவில்லை என்பதுதான் எமது பிரதான குறைகூறல்.

தேர்தல் சமயத்தில் வாக்குகளுக்காக – அதுவும் விருப்பு வாக்குகளுக்காக – வளைந்து கொடுக்க வேண்டிய கட்டாயமிருக்கையில், அந்த நெருக்கடியை உதாசீனம் செய்து தள்ளிவிட்டு, அவர் கட்சித் தலைவராக நடவடிக்கை எடுத்திருக்கின்றார்.

‘உடன் கட்சியிலிருந்து இடைநிறுத்துவது’ முதலான ஒழுங்கு நடவடிக்கைகளை உடன் எடுக்க வேண்டும் என்று சில திட்டவட்டமான தீர்மானத்துடன்தான் இது விடயத்தில் செயலாளருக்கு அனுப்பப்பட்ட அவரது பணிப்புரைக் கடிதம் அமைந்திருக்கின்றது.

கட்சியைக் கட்டுக்கோப்புக்குள் கொண்டு வருவதற்கு அண்மைய நாள்களில் அவர் எடுத்து வரும் நடவடிக்கைகள் மேலும் உறுதிப்பட வேண்டும். அவரது தலைமைத்துவ உறுதியை மெச்சுகிறோம்.

Hats off to தமிழரசுத் தலைவர்.

கட்சியைப் பொறுத்தவரை இடைநிறுத்தல், ஒழுங்கு நடவடிக்கை விசாரணை என்று இந்த விவகாரம் ஒரு புறம் நீள, மறுபுறத்தில் வேறு பக்கத்தினாலும் விடயம் சூடு பிடிக்க இருப்பதாகத் தெரிகின்றது.

ஊடக மாநாட்டைக்கூட்டி இப்படி ஒரு பகிரங்க அறிவிப்பை எந்த வித அடிப்படை ஆதாரங்களோ, சான்றுகளோ, சாட்சியங்களோ முன்வைக்காமல் நான்கு பெண்மணிகள் செய்திருக்கின்றார்கள் என்றால் அது அவர்களின் தனிப்பட்ட தீர்மானமாக இருக்காது என்பது கண்கூடு.

இந்த அம்பை எய்தவர் யார் என்பதை அம்பலப்படுத்தச் செய்வதில் சுமந்திரன் தரப்பு மிக உஷாராக இருக்கின்றது என்று தெரிகின்றது.

சுமந்திரன் மட்டத்தில் இரண்டு கட்ட நடவடிக்கைகளுக்கு அவர் விரைந்து தயாராகின்றார் என்று தெரிகின்றது.

ஒன்று – சிவில் நடவடிக்கை.

மற்றையது – குற்றவியல் நடவடிக்கைக்கான ஏற்பாடு.

தேர்தல் சமயத்தில் தமக்கு எதிராக இவ்வாறு நிதி மோசடிக் குற்றச்சாட்டு சுமத்தியமைக்கு எதிராக சுமந்திரன் வழக்குத் தாக்கல் செய்யவிருக்கின்றார். ஏற்பாடுகள் மிக உறுதியாக நடக்கின்றன. *“அது நிச்சயமாக இருக்கும். இரண்டாம் கதைக்கு இடமில்லை. என்ன காரணம் கொண்டும் அதில் பின்வாங்கல் இருக்க மாட்டாது.”* – என்று சுமந்திரனுக்கு நெருக்கமான சட்டவட்டாரங்கள் உறுதியாகக் கூறுகின்றன.

அடுத்தது – தேர்தல் ஆணையத்துக்கான முறைப்பாடு. தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர் பக்கம் 11 »

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

ஏதேனும் விதத்தில் இலங்கையில் மீண்டும் பயங்கரவாத சூழலை உருவாக்க சர்வதேச புலம்பெயர் அமைப்புக்கள் முயற்சித்துக்கொண்டே உள்ளன.

என்ன முயற்சி எடுத்தாலும் தமிழீழ விடுதலைப்புலிகள் மீண்டும் தலைதூக்க இடமளிக்கப்போவதில்லை. விடுதலைப் புலிகள் மட்டுமல்ல நாட்டைக் குழப்பும் எந்தவொரு அச்சுறுத்தலுக்கும் பதிலடி கொடுக்க இராணுவம் தயாராகவே இருக்கின்றது.

மத ரீதியிலான செயற்பாடுகள் எதுவும் நாட்டின் தேசிய பாதுகாப்பையும் நாட்டு மக்களின் சாதாரண வாழ்க்கையையும் பாதிக்க இடமளிக்க முடியாது.

இந்த விடயத்தில் நாம் விழிப்புடன் உள்ளோம். இலங்கைக்குள் சில மதக் குழுக்கள் இன்னமும் ஒரு சில தேசத் துரோக செயற்பாடுகளை முன்னெடுக்க முயற்சித்துக் கொண்டுள்ளமையை நாம் நன்கு அறிவோம். ஆனால், அந்த முயற்சிகளை நாம் தோற்கடிப்போம் – என்றார்.

---

## கைது செய்யப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எனப்படும் பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் 4 அதிகாரிகள் சி.ஐ.டியால் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், அவர்கள் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

சப் இன்ஸ்பெக்டர் ஒருவர், இரு சார்ஜன்ட்கள் மற்றும் ஒரு கான்ஸ்டபிள் ஆகியோரே இவ்வாறு பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் சி.ஐ.டி. விசேட விசாரணைகளை முன்னெடுக்கும் நிலையில், பொலிஸ் போதைப் பொருள்தடுப்புப்பிரிவின்பணிப்பாளரினால் இந்த நால்வரும் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார்.

---

## வாக்களிப்புக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கொரோனா பரவலைத் தடுப்பதற்கான சுகாதார வழிகாட்டு முறைகளின் அடிப்படையில் தேர்தலை நடத்தும்போது, வாக்களிப்பதற்குக் கூடுதல் நேரம் தேவைப்படுவதாக தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் குறிப்பிட்டார்.

எனவே, வாக்களிப்பு நேரத்தை ஒரு மணித்தியாலத்தினால் அதிகரிக்கவேண்டிய தேவை உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து தேர்தல்கள் ஆணைக் குழு கலந்துரையாடியிருப்பதாகவும், எனினும் இன்னமும் முடிவு எதையும் எடுக்கவில்லை என்றும் மஹிந்த தேசப்பிரிய கூறியுள்ளார்.

இன்று நடக்கவுள்ள தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கான கூட்டத்தில் வாக்களிப்பு நேரத்தை அதிகரிப்பது குறித்து முடிவெடுக்கப்படும் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

---

## கோட்டா - மஹிந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முன்னணியின் காரியாலயத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

பொருளாதாரத்தை முன்னேற்றும் சிறந்த திட்டங்களை வகுத்தே ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணி தேர்தல் பிரசாரங்களை முன்னெடுத்துள்ளது.

தேசிய உற்பத்திகளுக்கு முன்னுரிமை வழங்குவது அரசின் கொள்கையாகக் காணப்படுகின்றது.

ஜனாதிபதித் தேர்தல் காலத்தில் பொதுஜன முன்னணி வெளியிட்ட தேர்தல் விஞ்ஞாபனம் முழுமைப்படுத்தப்பட வேண்டும்.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் கலந்துகொள்ளும் பொதுஜன முன்னணியின் பிரசாரக் கூட்டம் எதிர்வரும் மாதம் 3ஆம் திகதி முதல் நாடு தழுவிய ரீதியில் ஆரம்பமாகின்றது.

சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் பிரசாரக் கூட்டங்கள் இடம்பெறும்.

ஜனாதிபதியின் கொள்கைகளைச் செயற்படுத்தும் அரசு தோற்றம் பெற வேண்டும் என்பதில் மக்கள் கவனம் செலுத்த வேண்டும். ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்ட கட்சி நாடாளுமன்றத்தில் நிலையான அரசு அமைப்பது அவசியமாகும் – என்றார்.

---

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேற் கண்டவாறு கூறிய அவர், மேலும் தெரிவித்ததாவது:–

பிரதமர் நாட்டுக்காக விசேட அறிவிப்பை வெளியிடுவதாகக் குறிப்பிட்டு அதனூடாக அவர் தனது தேர்தல் பிரசாரத்தையே முன்னெடுத்துள்ளார்.

தேர்தல் சட்டவிதிகளை மீறி மஹிந்த ராஜபக்ஷ செயற்பட்டு வருகின்றார். இவர் தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழு கவனம் செலுத்தி சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

முன்னாள் பிரதி அமைச்சர் கருணா அம்மான் என்றழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனைப் பாதுகாக்கவும் இந்த அறிவிப்பின் ஊடாகப் பிரதமர் மேலும் முயற்சி செய்துள்ளார்.

இதன்போது சர்வதேச மட்டத்திலான சதித் திட்டம் தொடர்பிலும் அவர் தெரிவித்திருந்தார். அது எவ்வகையான சதித்திட்டம் என்பதை நாட்டு மக்களுக்கு மஹிந்த தெரியப்படுத்த வேண்டும்.

பொதுத் தேர்தல் வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷ தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக அரச சொத் துக்களை முறைகேடாகப் பயன்படுத்தி வருகின்றார்.

சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவினால் அமுல்படுத்தப்பட்டிருக்கும் சட்டவிதிகளை அனைத்துக் கட்சிகளும் பின்பற்ற வேண்டும். இந்தநிலையில் ஆளும் தரப்பினருக்கு ஒருவகையிலும் எதிர்த் தரப்பினருக்கு இன்னொரு வகையிலும் சட்டம் செயற்பட்டால் ஆணைக்குழுவின் சுயாதீனத் தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்திவிடும் – என்றார்.

---

## ‘மொட்டு’ அணிக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட வேட்பாளர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இதிலிருந்து கருணா அம்மான் தெரிவித்த சர்ச்சைக்குரிய கருத்துத் தொடர்பில் அரசு எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கமாட்டாது என்பது நிரூபணமாகியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கருணா அம்மான் மன்னிக்க முடியாத கொலைக்குற்றவாளி. அவருக்கு எதிராக அரசுக்குள் இருப்பவர்களும் கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில், அவர்களின் வாய்க்களுக்குப் பிரதமர் மஹிந்த தற்போது வாய்ப்பூட்டு போட்டுள்ளார் என எமக்குத் தகவல் கிடைத்துள்ளது. பொதுத் தேர்தலில் தமது வாக்கு வங்கியில் சரிவு ஏற்படக்கூடாது என்பதைக் கருத்தில் கொண்டே பிரதமர் இந்தத் தீர்மானத்தை எடுத்திருக்கலாம். எனினும், கொலையாளிகளைப் பாதுகாக்கும் இந்த அரசுக்கு பொதுத்தேர்தலில் மக்கள் பதில் வழங்குவார்கள் – என்றார்

---

## வடக்கு மக்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உத்தியோகபூர்வ சந்திப்பில் ஆராயப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பு நேற்று நண்பகல் அலரி மாளிகையில் இடம்பெற்றதாகப் பிரதமரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

கொரோனாப் பெருந்தொற்று முடக்கல் காரணமாக குழப்பமடைந்துள்ள வடக்கு மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் குறித்து இந்தச் சந்திப் பின்போது விரிவாக ஆராயப்பட்டுள்ளது. மேலும், கடல் வழியாக நாட்டுக்குள் அத்துமீறி உள்நுழைபவர்கள் குறித்தும், சட்டவிரோத உள்நுழைவைத் தடுப்பது பற்றியும் இந்தச் சந்திப்பின் போது ஆராயப்பட்டிருப்பதாக பிரதமரின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது. (ம)

---

## அம்மானை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேற்று கொழும்பில் நடந்த செய்தியாளர்களிடம் பேசியபோது இதனை தெரிவித்தார்.

ஓமல்பே சோபித தேரர் மேலும் தெரிவிக்கையில் –

விநாயகமூர்த்தி முரளிதரன் அல்லது கருணா அம்மான் கிழக்கு மாகாணத்தின் ஆயுதப்படைத் தலைவராக அவர் செய்த குற்றங்களை அவர் குறிப்பிட்டார். யுத்தத்தில் சுமார் மூவாயிரம் துருப்புக்களைக் கொன்றதாக அவர் அறிவித்தார்.

கருணா அம்மான் அளித்த இந்த அறிக்கைகள் 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை மீறுகின்றன. மேலும், நாடாளுமன்ற சட்டத்தின் 81 ஆவது பிரிவு மீறப்பட்டுள்ளது. இந்த முறையில் சட்டவிரோதமாக நடந்து கொண்ட ஒருவர் பொதுத் தேர்தலில் போட்டியிடுகிறார்.

ஒரு கொலைகாரன் அல்லது ஒரு பயங்கரவாதி இதுபோன்ற குற்றங்களைச் செய்து, அதை பகிரங்கமாக அறிவித்து விட்டு தேர்தலில் போட்டியிட அனுமதிக்கக்கூடாது. அவர் ஒரு கடுமையான குற்றம் செய்துள்ளதால், அவர் உடனடியாக தேர்தலில் இருந்து நீக்கப்பட வேண்டும். இது தொடர்பாக தேர்தல் ஆணையத் தலைவருக்கு எழுத்துப்பூர்வ கோரிக்கை விடுத்தோம்.

மக்களின் அரசியல் தலைமை பல்வேறு வகைகளில் உள்ளது. சம்பந்தன்களும் விக்னேஸ்வரனும் தங்கள் அரசியல் கருத்துக்களை பல்வேறு வழிகளில் வெளிப்படுத்துகிறார்கள். கூட்டாட்சி மற்றும் தமிழ் மக்களுக்கு தனி ஆட்சி என்று அவர்கள் கோருகிறார்கள். ஆனால் அவர்கள் ஒருபோதும் எங்களைக் கொலை செய்வதாக அறிவிக்கவில்லை.

கருணா அம்மான் கடந்த காலங்களில் செய்த தவறுகளை அறிந்து தனது தவறுகளைப் புரிந்துகொண்டு எதிர்காலத்தில் இதுபோன்ற குற்றங்களைச் செய்யக்கூடாது என்ற ஜனநாயகப் பாதையில் வந்துள்ளார் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் அரசியலில் நுழைந்துள்ளார்.

அதன்படி, அவர் அரசியல் கட்சிகளின் துணைத் தலைவராக நியமிக்கப்பட்டார். எங்களுக்கு துணை அமைச்சுகள் கிடைத்தன. அப்படியானால், இந்த நபர் அரசாங்கத்தை ஏமாற்றுவதற்காகவும் அதன் பயங்கரவாத இலக்குகளை நிறைவேற்றுவதற்காகவும் இந்த ஜனநாயக நீரோட்டத்திற்குள் நுழைந்ததாக பொய் சொன்னார். எனவே இந்த அறிக்கையுடன், கருணா அம்மான் ஒரு ஆட்டுக்குட்டியல்ல, ஆபத்தான புலி என்பது தெளிவாகியது.

கருணா அம்மானுக்கு மன்னிப்பு வழங்கப்பட்டது. மன்னிப்பு வழங்கப்பட்டபோது, தெற்கில் உள்ள மற்ற அரசியல் கட்சிகளிடமிருந்து எந்த எதிர்ப்பும் இல்லை. அவர்களின் மறுவாழ்வை நாங்கள் ஏற்றுக்கொண்டு சமூகத்தில் மீண்டும் ஒன்றிணைந்தோம். ஆனால் அம்மான் பயங்கரவாதத்தில் பெருமைப்படுவார் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை.

பயங்கரவாதத்தை அவர் முன்னிறுத்தி மீண்டும் தேர்தலைச் சந்திக்கிறார். இதுபோன்ற கொலைகாரப் பயங்கரவாதிகளை எங்கள் நாடாளுமன்றத்திற்கு அனுப்பலாமா என்பதை நாம் முடிவு எடுக்க வேண்டும்.

அவருடன் சேரும் அனைவரும் இதற்குப் பொறுப்பேற்க வேண்டும். கருணா அம்மான் கூறிய இந்த பக்கம் 11 »

# ‘யானை’யின் பிளவு ‘மொட்டு’வின் வெற்றிக்கு மாபெரும் ஆசீர்வாதம்

## மஹிந்த அணி மகிழ்ச்சி



**ஐக்கிய தேசியக் கட்சி இரண்டாகப் பிளவுபட்டுள்ளமை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் வெற்றிக்கு மாபெரும் ஆசீர்வாதமாக இருக்கின்றது என முன்னாள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.**

கண்டியில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கண்டி, ஹேவாஹெட்ட தொகுதியின் பிரதான நகரங்களான தலாத்து ஓயா, தெல்தொட்டை மற்றும் ஹேவாஹெட்ட போன்ற நகரங்கள் கடந்த நூறு வருடங்களாக ஒரேவிதமாகவே இருந்து வருகின்றது. கடந்த காலங்களில் எதுவித அபிவிருத்தியையும் காண முடியவில்லை. ஆனால், தொடர்ந்து பல மாகாண சபை அங்கத்தவர்களும் உள்ளூராட்சி சபை அங்கத்தவர்களும் இருந்து வந்துள்ளனர். இதன் காரணமாக இப்பிரதேச வாக்காளர்கள் பெரும் அதிருப்தியுடன் உள்ளனர்.

2023ஆம் ஆண்டளவில் நாம் மத்திய அதிவேக வீதியை பூரணப்படுத்தவுள்ளோம். அதேநேரம் கண்டி நகரில் புதிய உள்ளூர் விமான நிலையம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது. எனவே, இவ்வாறான அபிவிருத்திகளின்போது இயல்பாகவே ஹேவாஹெட்ட தொகுதி அபிவிருத்தி அடையும் - என்றார்.

விரக்தி அடைந்துள்ள ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் பலர், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியுடன் இணைந்து வருகின்றனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# அவன்கார்ட் நிறுவனத்திடமிருந்து விஜயதாஸவே பணம் வாங்கினார்

## புகைப்பட ஆதாரம் இருக்கின்றது என்கிறார் ராஜித

கொழும்பு, ஜூன் 30

அவன்கார்ட் நிறுவனத்திடமிருந்து 20 மில்லியன் ரூபாவைத் தான் பெற்றுகொண்டார் என்று விஜயதாஸ ராஜபக்ஷ முன்வைக்கும் குற்றச்சாட்டை நிரூபிக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளர் ராஜித சேனாரத்ன சவால் விடுத்துள்ளார்.

விஜயதாஸ ராஜபக்ஷவே அவன்கார்ட் நிறுவனத்திடமிருந்து பணம் பெற்றுள்ளார் எனவும், இது தொடர்பில் எதிர்வரும் நாட்களில் தான் நிரூபிக்கவுள்ளார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுகாதாரத்துறையில் உயரிய பணியாற்றிய தனக்கு அவன்கார்ட் நிறுவனத்தின் பணம் தேவையில்லை எனவும், விஜயதாஸ பணம் பெற்றமை தொடர்பான புகைப்படமும் தன்னிடம் உள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அன்று விஜயதாஸ ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு வராமல், நிங்க சேனாதிபதியின் வீட்டில் பகல் உணவுக்குச் சென்றிருந்தார் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடக செயலாளராக அமெரிக்கத் தூதுவர்!



## கம்மன்பில கண்டுபிடிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகச் செயலாளராகவே இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் செயற்படுகின்றார்.

- இவ்வாறு புதிய ஹெல உறுமயவின் தலைவரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் வேட்பாளருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

எம்.சி.சி உடன்படிக்கை தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

எம்.சி.சி உடன்படிக்கைவிவகாரத்தில் தனது தாளத்துக்கேற்ப ஆடும் ஐக்கிய தேசியக்கட்சிக்கு சார்பான வகையில் அமெரிக்க தூதுவர் கருத்து வெளியிட்டுள்ளார். அவர் ஐ.தே.கவின் ஊடகச் செயலாளர் போலவே செயற்படுவதைக் காணமுடிகின்றது. எம்.சி.சி. ஒப்பந்தம் மற்றும் அதன் நிறுவனத்தின் யாப்புகள் எமது நாட்டு அரசமைப்புக்கு முரணானவை என விசாரணைக்குழு அறிக்கை சமர்ப்பித்துள்ளது - என்றார்.

அதேவேளை, எம்.சி.சி. உடன்படிக்கை தேவையில்லையெனில் அதனை அரசு குப்பைத்தொட்டியில் போடவேண்டும். மாறாக இழுத்தடிப்பு செய்யக்கூடாது என்று ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் சுட்டிக்காட்டினார்.

# விருப்பு வாக்குகளுக்காக மோதலில் ஈடுபடுவது நாகரிக அரசியலாகாது

## அமைச்சர் மஹிந்த அமரவீர சுட்டிக்காட்டு

விருப்பு வாக்குகளுக்காக ஒரே கட்சி ஆதரவாளர்கள் தாக்கப்படுவது கடும் கவலையளிக்கின்றது என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

அங்குனுகொலபெலஸ்ஸ பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அஹிம்சையாக அரசியலில் ஈடுபடுபவர்கள் நாம். விருப்பு வாக்குகளுக்காக எனது ஆதரவாளரை சிலர் தாக்கியுள்ளனர். இதை வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

எனது அரசியல் வாழ்வில் நான் எவருக்கும் அசௌகரியங்களை ஏற்படுத்தியவனல்லன். அம்பாந்தோட்டை மாவட்ட மக்கள் மாத்திரமன்றி முழு நாடும் இதை அறியும்.

அஹிம்சையே எனது நோக்கமாகும். எனது ஆதரவாளர்களுக்கும் இந்த அறிவுரையையே கூறியுள்ளேன். வாகனங்களில் செல்லும்போது கூட வேகத்தில் செல்ல வேண்டாமென அறிவிறுத்தல் வழங்கியுள்ளேன். இந்நிலையில்தான் எம்மீது வீரத்தைக் காட்ட சிலர் முயற்சிக்கின்றனர். இவர்களுக்கு உயர்ந்த கருத்தினாலே நாம் பதிலளிக்க வேண்டும்.

அம்பாந்தோட்டை மாவட்ட மக்களை மறப்பதற்கு நாம் தயாரில்லை. அன்று முதல் இன்று வரை எமது மாவட்ட மக்களுடனேயே இருந்து வருகிறேன். இதனை மக்களும் நன்கு அறிவர். எனவே, கீழ்த்தரமான செயல்களைக் கண்டு அஞ்சப் போவதில்லை - என்றார்.

# சஜித் வற்புறுத்தியதாலே பேராயரைச் சந்தித்தேன்

## தன் கையால் குறை ஏற்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார் என்கின்றார் ஹரின்



பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை குறித்து நான் முன்வைத்த கருத்துக்கள் உண்மைதான் என்பது எனது இதயத்துக்குத் தெரியும். ஆனால், அந்தக் கருத்தால் எனது கட்சியின் கத்தோலிக்க அமைச்சர்களுக்குப் பாதகமாக நிலை ஏற்படும் எனக் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் வற்புறுத்தலின் பேரில்தான் பேராயரைச் சந்தித்தேன்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய பட்டியல் வேட்பாளர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சஜித் பிரேமதாஸ என்னைத் தனியாக அழைத்துப் பேசினார். அத்தோடு பேராயரைச் சந்திக்க வேண்டும் என வலியுறுத்தியமையால் முடியாது எனச் சொல்லத் தயக்கத்தால்தான் அவருடன் இணைந்து அங்கு சென்றேன்.

பேராயர் மதத் தலைவர். இந்தநிலையில் அவருக்கும் எனக்கும் பிரச்சினைகள் இருப்பதை சஜித் பிரேமதாஸ விரும்பவில்லை. தற்போதைய நிலைமையை சஜித் எனக்கு விளக்கினார். அதன்பின்னரே பேராயரைச் சந்தித்தோம்.

பேராயருடன் மேற்கொண்ட கலந்துரையாடலின் போது தன்னுடைய கையால் குறை ஏற்பட்டுள்ளது என அவர் எம்மிடம் கூறினார் - என்றார்.

# இந்திய இராணுவத்தினரைத் தோற்கடிக்கவே புலிகளுக்கு பிரேமதாஸ ஆயுதம் வழங்கினாராம்

இந்திய இராணுவத்தினரைத் தோற்கடிக்கும் நோக்கிலேயே விடுதலைப்புலிகள் அமைப்புக்கு முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் ஆட்சிக் காலத்தில் ஆயுதங்கள் வழங்கப்பட்டன என ஐ.தே.க.வின் முன்னாள் அமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் ஆட்சிக் காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்ட விவகாரம் தொடர்பாக அரசியல் அரங்குகளில் வெவ்வேறு விதமாகப் பேசப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் குருநாகல் பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்ட அவர், அதற்குப் பதிலளிக்கும் வகையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குறித்த மக்கள்சந்திப்பில்காமினி ஜயவிக்ரம பெரேரா மேலும் கூறியுள்ளவை வருமாறு:-

ரணசிங்க பிரேமதாஸ ஜனாதிபதியாக பதவியேற்ற காலத்தில் இலங்கையில் இருந்து இந்திய இராணுவத்தினரை வெளியேறுமாறு நாளொன்றை வழங்கினார்.

மேலும் இந்திய இராணுவமானது, இலங்கையின் தேசிய கொடிக்கு பதிலாக, வடக்கு - கிழக்குக்கு எனத் தனியான கொடியை அறிமுகப்படுத்துமாறு வரதராஜப் பெருமாளுக்கு கோரிக்கை விடுத்தது.

இத்தகைய செயற்பாட்டுக்கு ஜனாதிபதி பிரேமதாஸ எதிர்ப்பை தெரிவித்தமையுடன் விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் பிரபாகரனுடனும் கலந்துரையாடலில் ஈடுபட்டார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## மாகாண சபை கிராம சபையாகும்

இந்தத் தேர்தலின் போதோ அல்லது அதன் பின்னரோ நாடாளுமன்றத்தில் புதிதாக அமையும் அரசுக்கு மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை கிடைத்தால் என்ன நடக்கும் என்பது குறித்துப் பல ஆரூடங்கள் கூறப்படுகின்றன.

இந்தத் தேர்தலின் முடிவின் அடிப்படையில் மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்களைப் பெறுவதே ராஜபக்ஷக்கள் தரப்பின் ஒரே முயற்சி.

அது பலிக்காவிட்டாலும் குதிரைப் பேரங்கள், குத்துக்கரணங்கள் மூலம் தேவையான எம்.பிக்களைத் திரட்டிக் கொள்ளலாம் என்ற முழு நம்பிக்கையில் ராஜபக்ஷக்கள் உள்ளனர்.

சிதறுண்டு கிடக்கும் எதிரணியில் இருந்து மிகுதியாகத் தேவையாகவுள்ள எம்.பிக்களைத் தேடிப் பிடித்துப் பொறுக்கி எடுத்துத் திரட்டுவது ராஜபக்ஷக்களுக்குக் கஷ்டமான காரியமாக இருக்கப் போவதில்லை.

மூன்றில் இரண்டு பங்கு எம்.பிக்களின் ஆதரவு கிட்டினால் முதல் நடவடிக்கை 19 ஆவது திருத்தத்தை நீக்குவதே என்பது ராஜபக்ஷக்களின் ஒரே நிலைப்பாடு.

அப்படி நேர்ந்தால், சுயாதீனக் குழுக்கள் பலவும் செயலிழக்கும். பிரதம நீதியரசரிலிருந்து உயரதிகாரிகளெல்லோரையும் நியமிக்கும் தனித்துவமான அதிகாரம் மீண்டும் ஜனாதிபதிக்குக் கிட்டும்.

ஏற்கனவே நாட்டை இராணுவ நிர்வாகக் கட்டமைப்புப் போல மாற்றி வரும் ஒருவருக்கு இந்த அதிகாரங்களும் கிடைத்தால், அதற்குப் பின்னர் நடக்கக் கூடிய விடயங்களைச் சொல்வதற்கு இடமில்லை. எதிர்பாராத பல பின்னடைவுகள் அரங்கேறும்.

நாடு முழு அளவில் இராணுவ மயப்படும். 2005 - 2015 காலப்பகுதியில் சந்தித்ததை விட மிக மோசமான இருண்ட யுகத்துக்குள் நாடு பிரவேசிக்கும். மீள முடியாத இராணுவப் பிடிக்குள் இலங்கைத் தீவு சிக்கும்.

இதற்கும் அப்பால், மோசமான இன்னொரு விடயமும் அரங்கேறலாம்.

நாட்டில் இருப்பது இனப்பிரச்சினையே அல்ல, பொருளாதாரப் பிரச்சினை என்று புது அர்த்தங்கள் காட்டி நிற்கின்றார் நாட்டின் தலைவர் கோட்டாபய ராஜபக்ஷ.

இனப் பிரச்சினைக்கு அதிகாரப் பகிர்வு தீர்வல்ல, பொருளாதார நெருக்குவாரத்தைத் தணித்தால் போதும் என்ற நிலைப்பாட்டில் அவர் இருக்கின்றார்.

அதிகாரப் பரவலாக்கலே தேவையற்றது என்பதே அவரின் சிங்கள, பௌத்த மேலாதிக்கச் சிந்தனையில் எழுந்த ஒரே முடிவு.

'வீடெரிக்கும் இராசாவுக்கு நெருப்பு எடுத்துக் கொடுக்கும் மந்திரி' என்பது போல அதிகாரப் பகிர்வு என்ற அடிப்படைக்கு எதிராகக் கடும் நிலைப்பாட்டில் நிற்கும் நாட்டின் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட புதிய ஆலோசனை ஒன்றை எடுத்துக் கொடுத்திருக்கின்றார்.

மாகாண சபைகளை ஒழிப்பது குறித்து அரசியல் கட்சிகள் தீவிரமாகச் சிந்திக்க வேண்டும் என்பதே அவரின் யோசனையாகும்.

வருடாந்தம் தேவையில்லாமல் 25 ஆயிரம் கோடி ரூபாவை மாகாண சபைகளுக்காக மத்திய அரசு செலவிடுவதாக அவர் கூறியிருக்கின்றார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தை ஒழிப்பதன் மூலம் மாகாண சபை முறைமையையே ஒழிக்கலாம் என்பது அவரது கண்டுபிடிப்பு.

“இனப் பிரச்சினைத் தீர்வுக்காக 1987 இல் மாகாணங்களுக்கு மேலதிக அதிகாரங்களை வழங்கும் 13 ஆவது திருத்தம் உருவாக்கப்பட்டது. ஆனால் அது மிகையான, சுமையான, அதிக செலவான, பயனற்ற விடயமாக மாறி விட்டது. மாகாண சபைகளை ஒழித்த பின்னர் உள்ளூராட்சி சபைகளுக்கு அதிகாரங்களை வலுப்படுத்த முடியும். மாநகர சபைகள், நகர சபைகள், பிரதேச சபைகளின் செயற்பாட்டை வலுப்படுத்தலாம்” என்பது அவரின் யோசனைத் திட்டம்.

அதிகாரப் பரவலாக்களுக்கு எதிரான தீவிர பௌத்த, சிங்களப் பேரினவாத மேலாண்மைச் சிந்தனையுடனும் அடக்கியாளும் ஆக்கிரமிப்பு எண்ணத்துடனும் இருக்கும் ராஜபக்ஷக்களின் அரசு, 19 ஆவது திருத்தத்தை நீக்கும் ஏற்பாட்டுடன் சேர்ந்து 13 ஆவது திருத்தத்தையும் நீக்க முயற்சிக்கும் பேராபத்து உள்ளமை மறுக்க முடியாதது.

அப்படி நேர்ந்தால் இந்தியப் பங்களிப்புடன் தமிழருக்குக் கிடைத்த மாகாண சபை எனும் அதிகாரப் பரவலாக்கல் அலகு, கழுதை தேய்ந்து கட்டெறும்பாகியமை போல கிராம சபையில் போய் முடியலாம்.

அப்படி நேர்ந்தால் தமிழரின் தலைவிதி அதுவென நோவதைத் தவிர எமக்கு வேறு மார்க்கம் இருக்கப் பேவதில்லை.

# கோட்டா அரசின் அசிங்கமான முகம் கிழக்கு தொல்லியலுக்கான செயலணி

## காட்டத்துடன் வைகின்றார் மனோ கணேசன்



**(பிரபாகரன் டிலக்சன்)**

இலங்கை என்பது சிங்கள மொழி பேசும், தமிழ் மொழி பேசும் மக்களின் பூர்விக நிலம். இங்கு பௌத்த, இந்து சமயங்கள் பரிணமித்து இருக்கின்றன. வடக்கு, கிழக்கு மற்றும் ஏனைய இடங்களிலே இருக்கின்ற புராதன பௌத்த சின்னங்கள் கூட ஒரு காலகட்டத்தில் இலங்கைத் தீவில் வாழ்ந்த தமிழ் பௌத்தர்களுக்குச் சொந்தமானவையாக இருந்திருக்கின்றன. அப்படியான வாரலாறுகள் எங்களுக்கு இருக்கின்றன என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

தமிழர்களுக்கு என்று தனித்துவமான பூர்வீகமான பிரதேசம் ஏதும் இல்லை என்ற கிழக்கு மாகாண தொல்பொருள் பிரதேசங்களை பாதுகாப்பதற்கான ஜனாதிபதி செயலணி உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரரின் கருத்துத் தொடர்பில் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

எக்காரணத்தைக் கொண்டும் தமிழர்களுக்கு என்று பூர்வீக நிலம் இங்கு இல்லை என்று எவரும் கூற முடியாது. இந் நிலையில் கிழக்கு மாகாணத்தை அபகரித்து பௌத்த மயமாக்கலுக்கு உட்படுத்தவே இந்த கிழக்கு மாகாண தொல்பொருள் பிரதேசங்களை பாதுகாப்பதற்கான ஜனாதிபதி செயலணி உருவாக்கப்பட்டதாக நான் நினைக்கின்றேன். கிழக்கில் பௌத்த மயமாக்கல் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டதன் பின்னர் வடக்கிற்கும் கிழக்கை போன்ற செயலணி அமைக்கப்படும்.

யுத்த வெற்றியின் பின்னர் நாட்டில் இருந்து தமிழ் மக்களை முற்றாகத் துடைத்தெறியும் நோக்கில் இந்த ஜனாதிபதி செயலணி செயற்படுவது தேரரின் கருத்தில் அப்பட்டமாக வெளிப்படுகின்றது. கோட்டாபய அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் இந்த நாடு ஓர் இனத்துக்கும் ஒரு மொழிக்கும் சொந்தமான நாடு என்ற ஓர் எண்ணப்பாட்டை முன்னெடுத்து வருகிறது.

கடந்த கால நல்லாட்சி தொடர்பில் பல்வேறான விமர்சனகள் காணப்பட்டாலும் அவ் ஆட்சியில் பல இனங்களைச் சேர்ந்த, பல மொழிகளை பேசும் மதங்களைக் கடைப்பிடிக்கும் நாடாகப் பல்வகைமையைப் பேணியிருந்தோம். இலங்கை பன்முகத் தன்மை வாய்ந்தது என்பதனை ஏற்றுகொள்வதே இலங்கையின் பிரச்சினைகளுக்கான அடிப்படை தீர்வு ஆகும். ஆனால் அதனை முற்று முழுதாக மறுதலிக்கும் வகையிலேயே கிழக்கிற்கான ஜனாதிபதி செயலணியும் அதன் உறுப்பினர்களும் செயற்பட்டு வருகின்றனர்.

எல்லாவல மேதானந்த தேரர் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த போது தமிழர்கள் இந்தியாவுக்கும் , முஸ்லிம்கள் பதிவியாவுக்கும் செல்லுமாறு நாடாளுமன்றத்தில் உரையாற்றினார். அதன் பின் உரையாற்றிய நான் “தாராளமாக நாங்கள் வெளியேறுகின்றோம். சிங்கள ஆண்களை அரேபியாவுக்கு அனுப்பி விட்டு, சிங்களப் பெண்களை நாங்கள் தென்னிந்தியாவுக்கு அனுப்பிவிடுகின்றோம். நீங்கள் தயாரா?” என்று பதிலளித்தேன். மகாவம்ச வரலாறுகள் கூட இதனைத்தான் சொல்கின்றன.

பல்லின சமூகங்கள் வாழும் இந்த நாட்டை ஓர்வ்இனத்தவர்களுக்கும் மட்டும் எனச் சொல்கின்ற இந்த கிழக்கு ஜனாதிபதி செயலணியை முற்றாக நிராகரிக்கின்றோம். இந்த அரசாங்கத்தின் அசிங்கமான முகமாகவே இந்த செயலணியை பார்க்கினறோம். - என்றார். (ம - 11)

# மக்கள் பாதை தவறினாலும் இலட்சிய வழியில் நிற்பதே தலைமைக்கு அழகு!

## தேசிய காங்கிரஸின் தலைவர் அதாவுல்லா கூறுகின்றார்

அரசியல் தலைமை என்பது மக்களுக்குப் பின்னால் செல்வதல்ல. இலட்சியப்பாதையில் அவர்கள் மீளத் திரும்பும் வரை, துணிவுடன் நிற்பதே தலைமைக்கு அழகு.

- இவ்வாறு தேசிய காங்கிரஸ் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா தெரிவித்தார்.

முஸ்லிம் பிரதேச முக்கியஸ்தர்களை அழைத்து கலந்துரையாடியபோதே அதாவுல்லா மேற்கண்டவாறு கூறினார்.

'சமகால அரசியலில் முஸ்லிம் சமூகத்தின் பங்கு' எனும் தொனிப்பொருளில் நடந்த கூட்டத்தில் உரையாற்றிய அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

அமையப்போகும் அரசில் முஸ்லிம்கள் பங்காளர்களாக வேண்டும். உணர்ச்சிகளுக்கு அடிமையாகும் மக்கள் சில வேளைகளில் இலட்சியப் பாதைகளைத் தவறவிடலாம். இதற்காகத் தலைமைகளும் அவர்களுக்குப் பின்னால் செல்ல முடியாது. சரியாகத் தெளிவடையும் வரை மக்களை வழிகாட்டுதுதான் தலைமைகளுக்கு அழகு. இவ்விடயத்தில் தனிமைப்பட நேர்ந்தாலும் தலைமைகள் துணிச்சலுடன் பணியாற்றி மக்களுக்குத் தெளிவூட்ட வேண்டும்.

அதிகாரங்களுக்காக அள்ளுண்டு செல்வது தலைமைக்கு அழகல்ல. இவ்வாறு அள்ளுண்டு சென்றதால்தான் முஸ்லிம் சமூகம் கடந்த ஆட்சியில் பல இன்னல்களை எதிர்கொள்ள நேர்ந்தது.

ஒரு குடும்பத்தை மாத்திரம் ஒழித்துக் கட்டும் நோக்கில் கொண்டுவரப்பட்ட அரசமைப்பின் 19ஆவது திருத்தம், இன்று அக்குடும்பத்தையே ராஜபரம்பரைக்கு உரித்தாக்கியுள்ளது. தென்னிலங்கை சமூகத்தின் நம்பிக்கைகளை இனியாவது வெல்வது பற்றி இன்னும் சில தனித்துவ தலைமைகள் யோசிக்கவில்லை. இதுதான் இன்றுள்ள ஆபத்து.

அமையப்போகும் அரசில் நிலைப்பாடுகளை மாற்றியுள்ளதான செய்திகளை முஸ்லிம்கள் சொல்ல வேண்டிள்ளனர்.

கடந்த 52 நாள் அரசில் கிடைத்த சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்தியிருந்தால் எமது சமூகம் இன்று தனிமைப்பட நேர்ந்திருக்காது.

இதில் தமிழர் தரப்பு அரசியல்வாதிகளும் தவறிழைத்து விட்டனர். தேர்தலுக்குப் பின்னர் அமையவுள்ள அரசுடன் பேசத் தயாரென சம்பந்தன், இப்போதே கூறத் தொடங்கியுள்ளார். சர்வதேசத்தின் அழுத்தத்துடனாவது, புதிய அரசுடன் இவர்கள் பேச்சு நடத்த இடமுண்டு. ஆனால், முஸ்லிம்களின் நிலைமைகள் கவலைக்கிடமாக இருப்பதற்கு நாம் இடமளிப்பதா? எனவே, தேசிய காங்கிரஸுக்கு வாக்களிக்க வேண்டிய காலத்தேவைக்குள் முஸ்லிம் சமூகம் திணிக்கப்பட்டுள்ளதாகவே கருத முடிகின்றது. பெரியளவில் சர்வதேச ஆதரவுகள் இல்லாத எமது சமூகம் எவ்வாறாவது புதிய அரசுடன் இணைந்து, இசைந்து செல்வதுதான் எமது மக்களைப் பாதுகாக்கும்.

எனவே, ஆட்சியாளர்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ள தேசிய காங்கிரஸைப் பலப்படுத்தி தென்னிலங்கை மக்களுக்கும் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கும் புதிய செய்திகளைச் சொல்ல முஸ்லிம்கள் தயாராக வேண்டும். எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பலமான சக்தியாக தேசிய காங்கிரஸ் திகழ்வதற்கான சூழ்நிலைகள் பரவலாகத் தென்படுகின்றன - என்றார்.

## ஆதாரமற்ற அபாண்டக் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தி

# கட்சிக்கும் வேட்பாளர்களுக்கும் அபகீர்த்தி ஏற்படுத்தும் தமிழரசு உறுப்பினர்கள் மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை

## சவுக்கைக் கையில் எடுத்தார் தலைவர் மாவை சேனாதிராசா



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜூன் 30

**தமிழரசுக் கட்சி மீதும், தமிழரசுக் கட்சி வேட்பாளர்கள் மீதும் ஆதாரங்கள் ஏதுமின்றி பகிரங்கமாக அபத்தக் குற்றச் சாட்டுக்களைச் சுமத்தி கட்சிக்கும் வேட்பாளருக்கும் அபகீர்தி ஏற்படுத்துவோர் தொடர்பில் கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா கட்சியின் செயலாளர் கி.துரைராஜசிங்கத்தை அவசரக் கடிதம் மூலம் பணித்துள்ளார்.**

இது தொடர்பாக மாவை சேனாதிராசா எழுதியுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

தமிழரசுக் கட்சி மகளிர் அணி மாவட்டச்செயலாளர் என்று கூறப்பட்ட விமலேஸ்வரி சிறீகாந்தரூபன் மற்றும் நால்வர் கடந்த 27 ஆம் திகதி யாழ்ப்பாணம் ஊடக மையத்துக்குச் சென்று தெரிவித்த கருத்துக்கள், குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக இக்கடிதத்தை எழுதுகிறேன். தாங்களும் தொலைபேசி மூலம் இவ்விடயங்கள் தொடர்பில் பேசியிருந்தீர்கள்.

1.'வடக்கு கிழக்கு பெண்களின் வாழ்வாதாரத்தை மீட்க என தமிழரசுக் கட்சிக்குக் கொடுத்த 212 மில்லியன் ரூபா எங்கே?' என்று 2020-06-28 அன்று ஊடகங்களில் வெளிவந்த செய்திகள்.

2. 'சிறீதரன், சுமந்திரனை தேர்தலில் தமிழ் மக்கள் நிராகரிக்க வேண்டும்' என்ற செய்திகள் (மேற்படி 28/06 வெளிவந்த பத்திரிகைச் செய்திகள்)

(அ). இச் செய்திகள் தொடர்பில் நேற்றும் இன்றும் தமிழரசு மகளிர் அணித் தலைவர் திருமதி. மதனி, செயலாளர் திருமதி வளர்மதி ஆகியோர் தொலைபேசி மூலம் முறையிட்டுள்ளனர்.

(ஆ) நேற்று (28/06) வேட்பாளர்களான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் சி.சிறிதரன் ஆகிய இருவரும் மேற்படி செய்திகள் பற்றி என்னிடம் முறையிட்டுள்ளனர்.

இவ்வாறு முறையிடப்பட்ட செய்திகளை யாழ்.ஊடகத்திற்குத் தாமாகவே, தன்னிச்சையாகவே திருமதி.விமலேஸ்வரியும் ஏனைய நால்வரும் சென்று வெளியிட்டுள்ளனர். இச்செய்திகள் தொடர்பில் கட்சித் தலைமைக்கோ அன்றி கட்சித் தலைவருக்கோ, பொதுச் செயலாளருக்கோ நேரடியாகவோ, எழுத்து மூலமாகவேனும் தெரிவிக்கவில்லை.

வெளியிட்டுள்ள செய்திகள் - குறிப்பாக நிதி தொடர்பான குற்றச்சாட்டுக்கள் - தொடர்பில் இறுதியாக நடைபெற்ற தமிழரசுக் கட்சி மத்திய செயற்குழுவில் எழுப்பப்பட்ட ஒரு கேள்விக்குக் கட்சியின் பொருளாளர், 'அவ்வாறான நிதி வரவு பற்றி கட்சியின் வங்கிக் கணக்கில் வரவே இல்லை. குறிப்பிடப்பட்ட நிதி தொடர்பிலும் எந்த விவரங்களும் தனக்கோ, கட்சிக்கோ எதுவும் தெரியாது' என்று பதிலளித்துள்ளார். மத்திய செயற்குழு அப்பதிலை ஏற்றுக் கொண்டது.

பத்திரிகைச் செய்தி வெளியிட்டவர்கள் செய்திகளில் குறிப்பிட்டவாறு, திருகோணமலை தமிழரசுக் கட்சியின் பொறுப்பிலுள்ளவரும், தற்போது தேர்தல் வேட்பாளரும், முன்பு கனடாவிலிருந்தவருமான குகதாஸிடமிருந்தோ, சுமந்திரனிடமிருந்தோ எந்த தகவலும் கட்சிக்குத் தரப்படவில்லை.

இவ்விடயம் தொடர்பில் பத்திரிகைக்கு இச்செய்திகள் வெளியிட்டவர்களும் எந்த ஆதாரத்தையோ, ஆவணத்தையோ, முறைப்பாட்டையோ கட்சித் தலைமையிடம் தெரிவித்திருக்கவில்லை.

இவ்விடயம் தொடர்பில் பொதுச் செயலாளர் ஒழுங்கு நடவடிக்கைக் குழுவுக்கு அறிவித்து கனடாவில் இவ்வாறு தெரிவிக்கப்படும் நிதி பற்றி அங்குள்ள எமது கூட்டமைப்புக் கிளை மூலம் விசாரணை நடத்த வேண்டுமென்று தங்களிடம் நினைவூட்டியிருக்கிறேன். இது பற்றி எந்த ஒரு ஆதாரமோ, ஆவணமோ, தொடர்பான அறிக்கையோ இதுவரை கிடைக்கவில்லை.

27/06 ஊடகத்துக்குச் சென்ற திருமதி. விமலேஸ்வரி மற்றும் நால்வரும் அதுவும் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ள காலத்தில் கட்சிக்கு அபகீர்த்தியையும், வேட்பாளர்களுக்குப் பங்கமேற்படும் வகையிலும் திட்டமிட்டு ஊடகங்களுக்குச் செய்தி பரப்பியது பாரதூரமான விடயங்களாகும். உண்மைக்கு மாறான செய்திகளுமாகும். இவ்விடயம் தொடர்பில் கட்சியும் ஒரு விசாரணை நடாத்தி மக்களுக்குத தெளிவுபடுத்த வேண்டும்.

இவ்வாறான - ஆதாரமற்ற - கட்சிக்குப் பங்கமேற்படுத்தக் கூடிய - செய்திகளைப் பரப்பியவர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் வேண்டும்.

2020 மார்ச் பகுதியில் பொதுத் தேர்தல் வேட்பு மனுக்கள் தயாரித்த காலத்தில் ஊடக மையத்தில் வெளியிட்ட செய்திகளுக்காக திருமதி.விமலேஸ்வரி, திருமதி. மிதிலைச்செல்வி மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்தல்கள் இருந்தபோதும் அவ்வாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை என்பதும் குறிப்பிட வேண்டும்.

அடுத்து இப் பொதுத் தேர்தலில் வேட்பாளர்களாக சுமந்திரன், சிறீதரனுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள், அறிவிப்புக்கள் கட்சிக்கும், வேட்பாளர்களுக்கும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியவைகளாகும். கட்சித் தலைமைக்குத் தெரிவிக்காமல் இத்தகைய செய்திகளைப் பரப்பியமைக்கு எதிராகச் சம்பந்தப்பட்டவர்கள் மீது கட்சித் தலைமை, 'உடன் கட்சியிலிருந்து இடைநிறுத்துவது' முதலான ஒழுங்கு நடவடிக்கைகளை உடன் எடுக்க வேண்டும்.

எனவே இக் குற்றச்சாட்டுக்கள் பற்றியும், குற்றஞ்சாட்டியவர்கள் பற்றியும் கட்சியின் ஒழுங்கு நடவடிக்கைக் குழுவுக்கு அறிவித்து ஒரு வாரத்தில் அறிக்கை பெற்று பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மகளிர் அமைப்பையும் கூட்டி உடன் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கையையும் எடுத்தாக வேண்டும் எனக் கேட்டுக் கொள்கின்றேன்.

அண்மைக்காலங்களில் தமிழரசுக் கட்சியின் கட்டுப்பாட்டை மீறியவர்கள், ஒழுங்கு நவடிக்கைக் கோவையின் படி விதிமுறைகளையும் மீறியவர்கள் மீதும் பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்து இவ்வாறான செயற்பாடுகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொள்கின்றேன். - என்றுள்ளது.

---

## நீர்வீழ்ச்சியில் தவறி வீழ்ந்த இளைஞனின் சடலம் மீட்பு

சேர எல்ல நீர்வீழ்ச்சியில் வீழ்ந்த இளைஞரின் சடலம் நேற்றுப்பகல் மீட்கப்பட்டுள்ளது.

நீர்வீழ்ச்சியில் புகைப்படம் எடுக்கச் சென்ற - திருமணமாகவிருந்த - ஜோடி தவறி வீழ்ந்த நிலையில், மணமகன் காணாமல்போயிருந்தார். இதேவேளை, மணமகள் காப்பாற்றப்பட்டார்.

நேற்றுமுன்தினம் பிற்பகல், லக்கல பொலிஸ் பிரிவுக்குச் சொந்தமான நக்கிள்ஸ் மலைத்தொடர் பிரதேசத்திலுள்ள சேர எல்ல நீர்வீழ்ச்சியில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. இவ்வாறு உயிரிழந்தவர், குருணாகல் பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடையவராவர்.

எதிர்வரும் மாதம் திருமணம் புரியவுள்ள இவர்கள், தமது பெற்றோருடன், குருநாகல் பிரதேசத்திலிருந்து லக்கல ரிவஸ்டன், நக்கிள்ஸ் போன்ற பிரதேசங்களில் புகைப்படம் எடுப்பதற்காகச் சென்றிருந்தனர்.

ரிவஸ்டன் பிரதேசத்திலிருந்து 12 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள இலுக்குபுர, சேர எல்ல நீர்வீழ்ச்சியில் புகைப்படம் எடுக்க இவர்கள் முயற்சித்துக்கொண்டிருந்த வேளையில், திடீரென்று குறித்த இளைஞரும் யுவதியும் நீரில் வழுக்கி வீழ்ந்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து மணமகள், அங்கு வந்தவர்களினால் காப்பாற்றப்பட்டுள்ளார்.

கடற்படையினரின் சுழியோடிகள் குறித்த இளைஞரைத் தேடிய நிலையில் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

---

## 10 வருடங்களில் ரூ.5 கோடி கூட கனடாக் கிளை வழங்காத போது ரூ.21 கோடி எங்கிருந்து வந்தது?

## கிளையின் தலைவர் தங்கவேல் கேள்வி

(ந.லோகதயாளன்)

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கனடாக் கிளை மூலம் 2010 போர் முடிவிற்கு பின்னர் கட்சிக்காக பல்வேறு சந்தர்பங்களில் அனுப்பிய பணத்தின் மொத்தப் பெறுமதியே 5 கோடி ரூபாவையும் தாண்டவில்லை என தமிழ் அரசுக் கட்சியின் கனடாக் கிளைத் தலைவர் வேலுப்பிள்ளை தங்கவேல்(நக்கீரன்) தெரிவித்தார்.

கனடாவில் இருந்து மகளிரின் மேம்பாட்டிற்காக நாம் 21 கோடி ரூபா பணத்தை அனுப்பிய நிலையில் கட்சியில் உள்ள சிலர் அபகரித்து விட்டனர் என்னும் தோறணையில் மகளிர் அணியைச் சேர்ந்த விமலேஸ்வரி அண்மையில் ஊடக சந்திப்பில் தெரிவித்திருந்தார். அது தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

2010ஆம் ஆண்டின் பின்னர் புனரமைக்கப்பட்ட தமிழ் அரசுக் கட்சியின் கனடாக் கிளையில் உறுப்பினராக , காப்பாளராக தற்போது தலைவராக பணியாற்றுகின்றேன். கனடாவில் எம் கிளையில் சுமார் 100 அங்கத்தவர்களும் அதேயளவு நெருங்கிய ஆதரவாளர்களும் ஒன்றித்துச் செயல்படுகின்றோம்.

இவ்வாறு செயல்படும் நிலையில் போரின் பின்பு பாதிக்கப்பட்ட மக்களிற்கான உதவியில் அதிகமாக வன்னிப்பகுதியிலேயே கவனம் செலுத்தினோம். அதில் கிளிநொச்சி , முல்லைத்தீவு , திருகோணமலை மாவட்டங்களே காணப்பட்டன. இதற்காக பல கட்டமாக கிளிநொச்சிக்கு 25 லட்சம் ரூபாவும், முல்லைத்தீவு மற்றும் திருகோணமலைக்கு 48 லட்சம் ரூபாவும் மட்டுமே வழங்கினோம். எந்தக் காலத்திலும் கோடி ரூபாவை காணவில்லை.

இவற்றின் பின்பு 2013ஆம் ஆண்டு மாகாண சபைத் தேர்தல் காலத்தில் தேர்தல் செலவிற்காக 24 லட்சம் ரூபா வழங்கினோம். அதே நேரம் எம்மால் அதிக தொகை பணம் வழங்கிய சந்தர்ப்பம் எனில் 2015 ஆம் ஆண்டு தேர்தல் செலவிற்காக 40 ஆயிரம் கனேடிய டொலராகும். இது இலங்கை நாணயத்தில் ரூபா 60 லட்சத்தைத் தொடும். 2018 உள்ளூராட்சி சபைத் தேர்தலிற்காக ஒரு 15 லட்சம் ரூபா வழங்கினோம். இவற்றினை விட ஓரிரு சிறு உதவிகளே வழங்கினோம். எக் காலத்திலும் கோடிகளில் பணம் வழங்கவில்லை. இவையும் கட்சிக்கான பணமாகவும் அனுப்பப்படவில்லை. சில பணியின் நிமித்தமே வழங்கப்பட்டன.

இவ்வாறு 2010ஆம் ஆண்டில் இருந்து சகல தேவைக்காக வழங்கிய பணத்தையும் கூட்டினாலும் 5 கோடி ரூபாவைக் கூடக் காண முடியாது 3 அல்லது 4 கோடி ரூபா பணமே கிடைக்கும். இந்த நிலையில் தாயகத்தில் இருந்து செயல்படும் பெண்மணி எதன் அடிப்படையில் இந்தக் கூற்றைக் கூறுகின்றாரோ நாம் அறியோம். இவ்வாறு கனடாவில் இருந்து அனுப்பிய நிதிகளில் குகதாசனின் பங்கு மிகவும் அளப்பரியது.

இவற்றிற்கும் அப்பால் திருகோணமலை உள்ளிட்ட பல இடங்களில் உள்ளூர் அமைப்புக்கள் ஊடாகவே பொதுப் பணிகளாக வீடுகள், கிணறுகள், பண்ணை என அமைத்து வழங்கினோமே அன்றி அந்தப் பணக் கொடுக்கலுக்கும் கட்சியின் தலைமைக்கும் நேரடித் தொடர்பு கிடையாது. இதற்கான கணக்குகளை பணத்தை வழங்கிய நாம் எந்த அமைப்பின் ஊடாக வழங்கினோமோ அவர்களிடத்திலேயே கோரிப் பெறுகின்றோம். - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# மகாராஷ்டிரா மாநிலத்தில் ஒரு மாதத்துக்கு ஊரடங்கு

## வெளியானது அறிவிப்பு

இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் ஜூலை மாதம் 31 ஆம் தேதி வரை ஊரடங்கு நீடிக்கப்படுகின்றது என்று அந்த மாநில அரசு தெரிவித்துள்ளது.

அந்த மாநிலத்தில் நடைமுறையில் உள்ள ஊரடங்கு இன்றுடன் முடிவுக்கு வர உள்ள நிலையில், கொரோனா வைரஸ் பரவும் வேகம் அதிகரித்து வருவதால் ஊரடங்கு ஜூலை 31 வரை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது. முன்னதாக மேற்கு வங்காளம், ஜார்க் கண்ட் ஆகிய மாநிலங்களும் ஊரடங்கை மேலும் ஒரு மாதத்திற்கு நீடித்து உத்தரவிட்டிருந்தன. இந்தியாவில் கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்து வருகிறது.

வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில்



ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. வைரஸ் பரவும் வேகத்தைக் கட்டுப்படுத்தும் விதமாக ஊரடங்கு நடவடிக்கைகள் இறுக்கப்படுகின்றன. மகாராஷ்டிராவில் கொரோனாவின் தாக்கம் தொடர்ந்து அதிகரித்துக்கொண்டே செல்கிறது. இந்தியாவிலேயே அங்குதான் வைரஸ் பாதிப்பு மற்றும் உயிரிழப்புகள் அதிகம் ஏற்பட்டுள்ளன.

# காஷ்மீரில் கடும் மோதல் முக்கிய ஆயுததாரி சாவு!

ஜம்மு காஷ்மீரின் ஆனந்த்நாக் மாவட்டத்தில் ஆயுததாரிகளுக்கும், இந்தியச் சிப்பாய்களுக்கும் இடையே நடந்த மோதலில் ஹிஸ்புல் முஜாகிதீன் என்ற அமைப்பின் முக்கிய தளபதியான மசூத் சுட்டுக்கொல்லப்பட்டார் என்று இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

தெற்குக் காஷ்மீரில் உள்ள ஆனந்த்நாக் மாவட்டம், குல் சோஹர் பகுதியில் ஆயுததாரிகள் பதுங்கி இருப்பதாகக் கிடைத்த தகவலுக்கு அமைய இந்தியப் படையினர் அந்தப் பகுதியைச் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தினர். இதன் போது அங்கு மறைந்திருந்த ஆயுததாரிகள் இந்தியப் படைகள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

இரு தரப்பினருக்கும் இடையே நடந்த துப்பாக்கிச் சண்டையில் 3 ஆயுததாரிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட 3 பேரில் இருவர் லஷ்கர் இ தொய்பா தீவிரவாதிகள் என்றும் ஒருவர் ஹிஸ்புல்



முஜாகிதீன் தீவிரவாத அமைப்பின் முக்கிய தளபதியான மசூத் என்றும் இந்தியப் படைகள் சார்பில் தெரிவிக்கப்பட்டது. இதுகுறித்து ஜம்மு காஷ்மீர் பொலிஸ் உயரதிகாரி தில்பாக் சிங் கூறுகையில் ' ஆனந்த்காக் மாவட்டத்தில் இன்று நடந்த துப்பாக்கிச்சூட்டில் ஹஸ்புல் தீவிரவாத அமைப்பின் முக்கிய தளபதி மசூத் கொல்லப்பட்டார், லஸ்கர் இ தொய்பா தீவிரவாத அமைப்பின் 2 தீவிரவாதிகளும் கொல்லப்பட்டனர் என்றார்.

# சாத்தான்குளம் பொலிஸார் கூண்டோடு இடமாற்றம்!

சாத்தான்குளத்தில் பொலிஸாரின் காவலில் அடுத்தடுத்து வர்த்தகர்களான தந்தை, மகன் உயிரிழந்ததையடுத்து சாத்தான்குளம் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிய பொலிஸார் அனைவரும் இடம் மாற்றப்பட்டனர். அவர்களுக்குப் பதிலாகப் புதிதாக 30 பொலிஸார் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சாத்தான்குளம் புதிய உதவி ஆய்வாளர்களாக டி.மணிமாறன் (கோவில்பட்டி கிழக்கு), எஸ்.முத்துமாரி (புதுக்கோட்டை அனைத்து மகளிர் காவல் நிலையம்), சிறப்பு உதவி ஆய்வாளராக டி.சுயம்புலிங்கம் (தட்டார்மடம்) ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். மேலும், 7 தலைமைப் பொலிஸார், ஒரு பெண் தலைமைப் பொலிஸார், 16 ஆண் பொலிஸார், 2 பெண் பொலிஸார் என அனைவரையும் புதிதாக நியமித்து மாவட்டப் பொலிஸ் கண்காணிப்பாளர் அருண் பாலகோபாலன் நேற்று உத்தரவிட்டார். இதன் மூலம் ஆய்வாளரையும் சேர்த்து சாத்தான்குளம் பொலிஸ் நிலையத்துக்கு 30 பொலிஸார் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

### பின்னணி

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தைச் சேர்ந்த வியாபாரிகளான ஜெயராஜ் மற்றும் அவரது மகன் பென்னிக்ஸ் ஆகிய இருவரையும் கடந்த 19ஆம் திகதி இரவு ஊரடங்கு காலத்தில் நிர்ணயித்த நேரத்தைத் தாண்டிக் கடையை திறந்திருந்து வைத்திருந்ததாகக் கூறிப் பொலிஸார் கைது செய்தனர். கோவில்பட்டி கிளைச் சிறையில் அடைக்கப்பட்ட இருவரும் அடுத்தடுத்து உயிரிழந்தனர். சாத்தான்குளம் பொலிஸார் தந்தை, மகன் இருவரையும் கொடூரமான முறையில் தாக்கியதால் தான் உயிரிழந்தனர் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இந்த சம்பவம் நாடு முழுவதும் கடும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. இந்த சம்பவம் தொடர்பாகச் சாத்தான்குளம் பொலிஸ் ஆய்வாளர் ஸ்ரீதர், உதவி ஆய்வாளர்கள் ரகு கணேஷ், பால கிருஷ்ணன், தலைமைப் பொலிஸ் அதிகாரி முருகன், முத்துராஜ் ஆகிய நான்கு பேர் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர். இதையடுத்து சாத்தான்குளம் பொலிஸ் நிலையத்துக்குப் புதிய ஆய்வாளராக, கன்னியாகுமரி மாவட்டம் வடசேரி பொலிஸ் நிலையத்தில் ஆய்வாளராகப் பணியாற்றி வந்த எப்.பெர்னார்ட் சேவியரை நியமித்து திருநெல்வேலி சரக டிஐஜி பிரவின் குமார் அபிநபு நேற்று உத்தரவிட்டார். அதன் தொடர்ச்சியாக சாத்தான்குளம் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றி வந்த அனைத்து பொலிஸாரும் கூண்டோடு மாற்றப்பட்டு, புதியவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# திருப்பதி தரிசனத்துக்கு ஒன்லைனில் பற்றுச்சீட்டு

கொரோனா முடக்கத்து மத்தியில் இந்தியாவின் திருப்பதி கோவில் தரிசனத்துக்கு முற்பதிவுகளை இணையத்தில் மேற்கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்படுகிறது. இதற்குரிய பற்றுச்சீட்டுகளை இணையத்தில் விநியோகிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனடிப்படையில் அடுத்த மாதம் (ஜூலை) ஒடுக்கீடு அடிப்படையில் நாள் ஒன்றுக்கு 9ஆயிரம் வரையில் 300ரூபா (இந்திய மதிப்பில்) பற்றுச்சீட்டுகள் வழங்கப்பட உள்ளன. இந்தச் செயற்றிட்டம் நேற்று திருமலை – திருப்பதி தேவஸ்தான இணையதளத்தில் ஆரம்பகட்டமாக வெளியிடப்பட்டது.



# சாத்தான்குளம் விவகாரத்தை 'சி.பி.ஐ'க்கு மாற்ற வேண்டும்

## கோருகிறது தமிழக அரசு

சாத்தான் குளத்தில் தந்தையும் மகனும் பொலிஸாரால் அடித்துக்கொல்லப்பட்டதாகக் கூறப்படும் வழக்கை மத்தியப் புலனாய்வுத் துறையின் விசாரணைக்கு மாற்றுமாறு தமிழக அரசின் சார்பில் மதுரை உயர் நீதிமன்றக் கிளையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கை நீதிமன்றத்தின் அனுமதி பெற்று சி.பி.ஐக்கு மாற்றவிருப்பதாகத் தமிழக முதலமைச்சர் எடப்பாடி கே. பழனிசாமி அறிவித்திருந்த நிலையில், இன்று சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளையில் முன்னிலையான தமிழக அரசின் மேலதிக தலைமை வழக்கறிஞர் செல்லப்பாண்டியன், இந்த வழக்கைத் தமிழக அரசு சி.பி.ஐக்கு மாற்ற விரும்புவதாகத் தெரிவித்தார்.

இதனைக் கேட்ட நீதிபதிகள், வழக்கை சி.பி.ஐக்கு மாற்றுவதென்பது தமிழக அரசின் கொள்கை இதற்கு நீதிமன்றத்தின் அனுமதி தேவையில்லையெனத் தெரிவித்தனர்.

### தந்தை - மகன் சாவு

தூத்துக்குடி மாவட்டம் சாத்தான்குளத்தில் தங்களது கடையைக் கூடுதல் நேரம் திறந்திருந்த காரணத்தால் பொலிஸாருடன் ஏற்பட்ட தகராறில் பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்ட தந்தை – மகன் ஆகிய இருவரும் கோவில்பட்டி கிளைச் சிறையில் அடுத்தடுத்து உயிரிழந்தனர். இந்த விவகாரம் தேசிய அளவில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது.

இந்த விவகாரத்தைத் தற்போது நீதித்துறை நடுவர் விசாரணை செய்து வருகிறார். மேலும் சென்னை உயர் நீதிமன்றத்தின் மதுரைக் கிளையும் தானாக முன்வந்து விசாரணை செய்து வருகிறது.

# ஊரடங்கு என்பது கோடரியால் நுளம்பை கொல்வது போன்றது

## மருத்துவ நிபுணர் தெரிவிப்பு

ஊரடங்குச் சட்டம் என்பது கோடரியால் நுளம்பைக் கொல்வது போன்றது என்று இந்திய மருத்துவ நிபுணர் குழுவைச் சேர்ந்த மருத்துவர் ராமசுப்ரமணியம் தெரிவித்தார். தமிழக அரசு அமைத்துள்ள 19 நிபுணர்கள் அடங்கிய மருத்துவக்குழுவினர் இன்று முதல்வர் உள்ளிட்ட அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினர். இதன் பின்னர் மருத்துவர் ராமசுப்ரமணியம் தெரிவித்ததாவது: நிறையப்பேர் கொரோனா குறித்துப் பயப்படுகிறார்கள்.

80 சதவீதத்துக்கு மேல் இந்த அறிகுறி மென்மையான ஒன்றாக உள்ளது. யாருக்கும் சிறு அறிகுறி இருந்தால்கூட தயவு செய்து தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும். சோதனை முடிவு வர இரண்டு மூன்று நாள்கள் ஆனாலும் அதுவரை தனிமையில் இருங்கள். கடந்த வாரங்களில் சிகிச்சைகள் முன்னேற்றமடைந்துள்ளன. ஊடகங்களும் எங்களுக்கு ஒத்துழைக்க வேண்டும், இதுபோன்ற விடயங்களை மக்களிடம் கொண்டு சேர்க்கவேண்டும். முகக்கவசம் அணியாமல் வெளியில் வராதீர்கள். சின்ன சின்ன தடுப்பு முறைகள் மூலம் நோய்பரவுதலை தடுக்கலாம். அரசு சொல்வதைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும்.

முழு ஊரடங்கு தனித்துவமான ஒன்று. பெரிய ஆயுதம் ஆகும். அது கோடரியை எடுத்து நுளம்பைக் கொல்வது போன்றது. ஊரடங்கால் பயன் வந்துள்ளது. அதற்காக ஊரடங்கை இன்னும் ஆறுமாதம் நீடிப்பதில் பயனில்லை. தற்போது ஊரடங்கை நாங்கள் பரிந்துரைக்கவில்லை, கட்டுப்பாடுகள் குறித்து மட்டுமே தெரிவித்துள்ளோம்.



# ஆடு, மாடு விற்கக் குவிந்தவர்களை குறிவைத்து ரொக்கெட் தாக்குதல்

## ஆப்கானிஸ்தானில் அவலம்

ஆப்கானிஸ்தானில் கால்நடைச் சந்தை ஒன்றின் மீது நடந்த ரொக்கெட் தாக்குதலில் பொதுமக்கள் 23பேர் கொல்லப்பட்டனர்.

பலர் காயமடைந்தனர். ஆப்கானிஸ்தானின் தெற்கு ஹெல்மண்ட் மாகாணத்தின் சங்கின் மாவட்டத்தில் இந்தச் சம்பவம் நடந்தது. அங்குள்ள திறந்தவெளி வாராந்தக் கால்நடைச் சந்தை மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அயல் மாவட்டங்களைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான கிராம மக்கள் ஆடு மற்றும் மாடுகளை வர்த்தகம் செய்வதற்கு அங்கு கூடியபோது இந்தத் தாக்குதல் நடந்துள்ளது. தலிபான் ஆயுததாரிகளால் ஏவப்பட்ட ரொக்கெட்டுகள் சந்தைக்கு அருகே வந்து வீழ்ந்ததில், குழந்தைகள் உட்பட 23 பொதுமக்கள் கொல்லப்பட்டனர் என்று அரச அதிகாரிகள் குற்றம் சாட்டினர். ஆப்கானிஸ்தானில் போரிட்டுவருகின்ற இராணுவம் - தலிபான் தரப்பினர் இதுவிடயத்தில் ஒருவரையொருவர் குற்றம் சாட்டினர்.

# விமானத்தைச் சுட்டது தனி நபரது செயல்!

## ஈரான் தெரிவிப்பு



உக்ரைனின் பன்னாட்டு எயார் லையன்ஸ் 752 என்ற வானூர்தி இந்த வருடம் ஜனவரி மாதம் ஈரானில் இருந்து ஏவப்பட்ட ஏவுகணை மூலம் சுட்டு வீழ்த்தப்பட்டதில் 176பேர் கொல்லப்பட்டனர்.

இது குறித்து ஈரான் இராணுவத்தின் சட்டத்தரணி கோலம் அப்பாஸ் டோர்கி கூறுகையில் -

தனி மனிதப் பிழையே உக்ரைன் விமானத்தைச் சுட்டு வீழ்த்த வழிவகுத்தது, இந்த விபத்துத் தொடர்பாக மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இது தனி மனிதப் பிழையின் காரணமாக நடந்தது, மூத்த இராணுவ அதிகாரிகளின் உத்தரவுக்கு அமைய அந்த வானூர்தி சுடப்படவில்லை என்று தெரிவித்தார்.

# மேற்குக் கரையை இணைக்கும் விவாதத்துக்கு நாள் சரியில்லை



இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரை நிலத்தை கையகப்படுத்துவது குறித்து விவாதிப்பதற்கு ஜூலை மாதம் 1 திகதி நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் இந்த நாள் 'புனிதமானது அல்ல' என்று காண்ட்ஸின் கட்சி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவின் உயர்மட்டக் கூட்டணி பங்குதாரரான பென்னி காண்ட்ஸ் தரப்பிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது என்று பன்னாட்டு ஊடகங்கள் சுட்டிக்காட்டின.

இஸ்ரேல் அரசின் இந்தத் திட்டத்தைப் பாலஸ்தீனியர்கள் புறக்கணித்த நிலையில், ஒரு கூட்டணி அரசை அமைப்பது குறித்த ஒப்பந்தத்தை எட்டுவதற்கு காண்ட்ஸ் உட்படச் சிலர் முற்பட்டனர் என்றும் அந்த ஊடகச் செய்திகள் மேலும் தெரிவித்தன.

# நான்கு ஆண்டுகளில் 129சிறார்கள் கொலை!

## பிலிப்பைன்சில் நிலவரம்

பிலிப்பைன்ஸில் கடந்த நான்கு ஆண்டுகாலமாக முன்னெடுக்கப்பட்ட போதைப்பொருள் அழிப்பு நடவடிக்கைகளில் 129 குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர்.

இதில் பெரும்பாலான குழந்தைகள் பொலிஸ் அல்லது அதனுடன் இணைந்த தாக்குதல்தாரிகளால் கொல்லப்பட்டுள்ளனர். இந்த எண்ணிக்கை ஒரு பகுதியளவானது மட்டுமே என்று மனித உரிமைகள் ஆர்வலர் குழுக்கள் தெரிவித்தன.

சிறார்களை நேரடியாகக் குறிவைத்தும், தவறான அடையாளப்படுத்தல்களாலும் இந்தச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன என்று ஆர்வலர்கள் அறிக்கையிடுகின்றனர்.

சித்திரவதைக்கு எதிரான உலக அமைப்பு மற்றும் பிலிப் பைன்ஸைத் தளமாகக் கொண்ட குழந்தைகளின் சட்ட உரிமைகள் மற்றும் மேம்பாட்டு மையம், ஐ.நா. மனித உரிமைகள் சபை என்பன இந்தச் சட்டவிரோத கொலைகள் மற்றும் பிற குற்றங்கள் தொடர்பான சுயாதீன விசாரணை குறித்த ஆணையகத்தைத் தொடங்க உள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

# ஏஜியன் கடலில் மூழ்கியது படகு 35 அகதிகள் மீட்கப்பட்டனர்

ஏஜியன் கடலில் மூழ்கியபடியிருந்த ஒரு படகில் இருந்து 35 அகதிகளை மீட்டதாகவும், மேலும் காணாமல் போன நான்கு பேரைத் தேடுவதாகவும் துருக்கியின் கடற்படை தெரிவித்துள்ளது.

துருக்கியில் நேற்று அதிகாலை 2:45 மணியளவில் இவர்கள் மீட்கப்பட்டனர். துருக்கியின் மேற்கு பாலிகேசிர் மாகாணத்தில் அய்வாலிக் கடற்கரையில் ஒரு சிறிய தீவுக்கு அருகில் இந்தச் சம்பவம் நடந்தது.

மத்திய கிழக்கு நாடுகளில் நிகழும் மோதல்களில் இருந்து தப்பிக்கும் மக்களுக்கு ஐரோப்பாவுக்குரிய நுழைவாயிலாகக் கிரேக்கம் இருக்கிறது. பெரும்பாலும் துருக்கிய கடற்கரைக்கு அருகிலுள்ள அதன் தீவுகள் வழியாக. 2015 - 16 ஆம் ஆண்டில் துருக்கியிலிருந்து ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் கிரேக்கத்தை அடைந்தனர். அகதிகளை இனி தடுத்து நிறுத்த மாட்டோம் என்று துருக்கி கூறியதைத் தொடர்ந்து, நிலம் மற்றும் கடல் எல்லைகள் வழியாகக் கிரேக்கத்திற்குள் நுழைபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

# ரஷ்யா வெகுமதி அறிவித்த விடயம் எனக்கு விளங்கப்படுத்தப்படவில்லை!



அமெரிக்கப் படைகளைக் கொன்றால் தலிபான்களுடன் தொடர்புடைய போராளிகளுக்குப் பணம் (வெகுமதி) செலுத்துவதாக ரஷ்யா அறிவித்தமை குறித்துத் தனக்கு ஒருபோதும் விளக்கப்படவில்லை என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டுள்ள அமெரிக்கச் சிப்பாய்கள் மீது தாக்குதல் நடத்திக் கொன்றால் கொல்பவர்களுக்கு வெகுமதி அளிக்கப்படும் என்று அமெரிக்காவின் நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை செய்தி வெளியிட்டது.

அந்தச் செய்தியால் அமெரிக்காவில் பர பரப்பு ஏற்பட்டது. தேர்தல் களமும் சூடுபிடித்தது. இந்த நிலையிலேயே ட்ரம்ப் இவ்வாறு தெரிவித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் -

ஆப்கானிஸ்தானில் எங்கள் துருப்புக்கள் மீது ரஷ்யர்களால் நடத்தப்பட்ட தாக்குதல்கள் குறித்து யாரும் எனக்கு விளக்கவில்லை அல்லது சொல்லவில்லை. வி.வி.பி பென்ஸ், தலைமைத் தளபதி மார்க்மெடோஸ் என யாருமே இது குறித்து எனக்குத் தெரியப்படுத்தவில்லை என்று ட்ரம்ப் தெரிவித்தார்.

வெள்ளை மாளிகை மற்றும் தேசிய புலனாய்வு இயக்குநரும் முன்னதாக இந்த அறிக்கையை மறுத்தனர். ரஷ்யாவின் வெளியுறவு அமைச்சகமும் இதை நிராகரித்தது. இந்த நிலையிலேயே ட்ரம்ப் இவ்வாறு தெரிவித்தார்.

# அயர்லாந்தின் புதிய பிரதமராக தெரிவானார் மைக்கல் மார்ட்டின்

அயர்லாந்து நாடாளுமன்றத்தின் கீழ்ச் சபையில் நடைபெற்ற வாக்கெடுப்பில் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று அந்த நாட்டின் புதிய பிரதமராக மைக்கல் மார்ட்டின் தெரிவு செய்யப்பட்டார்.

2022 ஆம் ஆண்டு வரை அவர் அந்த நாட்டின் பிரதமராகப் பதவி வகிப்பார் என்று தெரிவிக்கப்படுகிறது. அயர்லாந்தில் கடந்த பெப்ரவரி மாதம் பொதுத் தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலில் எந்தவொரு கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்கவில்லை. இதனால் புதிய அரசை அமைப்பதில் சிக்கல் எழுந்தது.

கூட்டணி ஆட்சியை அமைக்க வேண்டிய கட்டாயம் எழுந்தது. இதற்காக நாட்டின் முக்கிய இரு பெரும் கட்சிகளான பியானா பெயில் மற்றும் பைன் கெயில் ஆகியன பேச்சு நடத்தின. இதில் கூட்டணி அமைத்து ஆட்சி அமைக்க ஒப்புக் கொண்டன.

இந்த நிலையில் பிரதமரைத் தெரிவு செய்வதற்கான வாக்கெடுப்பு அந்த நாட்டு நாடாளுமன்றத்தின் கீழ்ச் சபையில் நடைபெற்றது. பியானா பெயில் கட்சியின் தலைவர் மைக்கல் மார்டின் பிரதமர் பதவிக்கு வேட்பு மனுத் தாக்கல் செய்திருந்தார்.

கீழ்ச் சபையிலுள்ள 160 உறுப்பினர்களில் 93 பேர் மைக்கல் மார்ட்டினுக்கு ஆதரவாக வாக்களித்தனர். 63 பேர் அவருக்கு எதிராக வாக்களித்தனர். 3 பேர் வாக்களிப்பில் பங்குபற்றவில்லை. இதன் மூலம் அதிக வாக்குகள் வித்தியாசத்தில் மைக்கல் மார்ட்டின் வெற்றி பெற்றுப் பிரதமரானார்.

காலைக்கதிர் Kalaikkathir

# கருணாவை விட மோசமானவர்கள் நல்லாட்சிக்காரர்

## சாடுகின்றார் மஹிந்த



கருணா கொலைகளைச் செய்த காலத்திலும், அதன் பின்பும், இன்று வரையும் நல்லாட்சித் தரப்பினரின் நிகழ்ச்சி நிரல் நாட்டைப் பிளவுபடுத்துவதாகும். கருணா கொலைகளைச் செய்வதைக் கைவிட்டுள்ள போதிலும், நல்லாட்சியாளர்கள் நாட்டைப் பிளவுபடுத்துவதைக் கைவிடவில்லை. அதனையே நாம் இங்கு புரிந்துகொள்ள வேண்டும்.

- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

'இலங்கைக்கு எதிரான உள்நாட்டு வெளிநாட்டு சூழ்ச்சிகளைத் தோற்கடிப்போம்' எனும் தலைப்பில் ஆற்றிய உரையின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நாட்டில் 1970ஆம் ஆண்டு சோலிச அரசொன்று ஆட்சிக்கு வந்தபோது அது ரஷ்யா, சீனா போன்ற நாடுகளின் தலையீட்டுடன் உருவாக்கப்பட்ட அரசு என யாரும் கூறவில்லை. அதேபோன்று 1977ஆம் ஆண்டு முதலாளித்துவ அரசொன்று அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டபோது அது அமெரிக்கா, பிரிட்டன் போன்ற நாடுகளின் தலையீட்டுடன் உருவாக்கப்பட்ட அரசு என நாம் கூறவில்லை. எனினும், 2015 ஜனவரி மாதம் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலின்போது வரலாற்றில் நாம் ஒருபோதும் காணாத அளவில் வெளிநாட்டுத் தலையீடுகள் காணப்பட்டன.

2009ஆம் ஆண்டு நாம் போரை வெற்றிகொண்ட பின்பு இந்த நாட்டு அரசியலில் வெளிநாடுகள் கடுமையாகத் தலையீடு செய்யத் தொடங்கின. எமது நாட்டுக்கு எதிரான வெளிநாட்டு சக்திகள் நாம் அந்தப் போரை வெற்றிகொள்வோம் என ஒருபோதும் நினைக்கவில்லை.

2010ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின்போதுதான் முதலாவதாக இந்தத் தலையீடு இடம்பெற்றது. எனினும், இந்த நாட்டு மக்கள் அந்த முயற்சியை தீர்மானமிக்க வகையில் தோற்கடித்தனர். எனினும், 2015 வரை தொடர்ச்சியாக அந்தச் சூழ்ச்சி செயற்பட்டது. 2015இல் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ஜனாதிபதிப் போட்டியிலிருந்து விலகி பொது வேட்பாளர் ஒருவரைப் போட்டியிடச் செய்ய வேண்டும் எனத் தீர்மானித்தது யார் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

2015 இல் நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வந்த பின்பு எதிரி இராணுவமொன்று இலங்கையை ஆக்கிரமித்து அதிகாரத்தைப் பிடித்துக்கொண்டது போன்ற ஒரு நிலைமையே ஏற்பட்டது.

நாட்டைப் பிரிப்பதற்கு எதிரான மொத்த தேசியவாத முகாமையும் அவர்கள் தாக்கினர். இந்த நாட்டையும், நாட்டினரையும் பாதுகாக்கின்ற மகா சங்கத்தினரை அடிபணியச் செய்வதற்காக பிரதான பிக்குமாரைப் பொய்யான குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் சிறையிலடைத்தனர். விகாரைகளில் உள்ள யானைகளின் பின்னாலேய அவர்கள் அதிகம் துரத்திச் சென்றனர்.

பௌத்தர்களின் பெரஹறா கலாசாரத்தை அகற்றுவதே அதன் நோக்கமாகும். தீவிரவாதத்தைத் தோற்கடித்து நாட்டைக் காத்த இராணுவப் படையைச் செயலிழக்கச் செய்வதற்காகக் கீழ்மட்ட இராணுவ வீரன் முதல் பாதுகாப்பு பதவி நிலைப் பிரதானி வரை தெரிவுசெய்யப்பட்ட முப்படை அங்கத்தவர்களைக் கைதுசெய்து, பொய்யான குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் பல வாரங்களாக, பல மாதங்களாக, பல வருடங்களாக சிறையில் அடைத்து பொய்யாக வழக்குகளைத் தொடர்ந்தனர். இவர்கள் படைவீரர்கள் அல்லர், இவர்கள் திருடர்கள், கொலைகாரர்கள் என்ற கருத்தை இலங்கை மக்களின் உள்ளங்களில் பதித்து, உலகம் முழுவதும் அதனைப் பிரசாரம் செய்வதற்காகவே அவர்கள் அவவாறு செய்தனர்.

தேசியவாத முகாமைச் சார்ந்த அரசியல்வாதிகளுக்கு வழங்க முடியுமான சகல தண்டனைகளையும் வழங்கினர். விசாரணை ஆணைக்குழுக்களை நியமித்தனர். பொலிஸுக்கு வரவழைத்தனர். பல மாதங்கள் விளக்கமறியலில்வைத்தனர். பொய்யாகவழக்குகளைத்தொடர்ந்தனர். இந்த நாட்டின் தேசியவாத முகாமை முழுமையாக அழித்து, புதிய அரசமைப்பொன்றை நிறைவேற்றி, நாட்டைப் பிரித்து ஒரு முடிவைக் காண்பதற்காகவே இந்த அனைத்தையும் செய்தனர். போரால் செய்ய முடியாமல் போனதை இவ்வாறு அரசியல் நடவடிக்கைகள் மூலம் செய்ய முயற்சித்தனர்.

2019 நவம்பர் மாதம் நாம் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றமையால், அந்தத் திட்டத்தை இறுதி வரை நிறைவேற்ற முடியாமல் போனது. எனினும், உள்நாட்டு, வெளிநாட்டு சூழ்ச்சியாளர்கள் தமது வேலையைக் கைவிடவில்லை. புதிய ஜனாதிபதி பதவியேற்று சில நாள்களினுள் மேற்கத்தேய தூதரகமொன்றில் பணியாற்றும் பெண்ணொருவர் கடத்தப்பட்டு, விசாரணைக்குட்படுத்தப்பட்டார் என அரங்கேற்றப்பட்ட பொய்யான நாடகத்தை நாம் அனைவரும் கண்டோம். புதிய அரசுக்கு மூச்சு விடுவதற்குக்கூட இடமளிக்க இந்தச் சூழ்ச்சியாளர்கள் தயாரில்லை என்பது அதன் மூலம் தெளிவானது.

2015 இல் இந்த நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றிய நல்லாட்சி சூழ்ச்சியாளர்கள் தமது வெளிநாட்டு முதலாளிமாருக்கு வழங்கிய வாக்குறுதிப் பத்திரமே 2015 ஒக்டோபர் மாதம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையில் இலங்கையின் இணை அனுசரணையுடன் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானமாகும்.

இலங்கை இராணுவத்தினர் போர்க்குற்றங்களைச் செய்தனர் என்பதை ஏற்றுக்கொள்வதையே அதன் மூலம் முதலில் செய்தனர். அதன் பின்னர் அந்தப் போர்க் குற்றங்களை விசாரிப்பதற்காக வெளிநாட்டு நீதிபதிகள் மற்றும் வழக்குரைஞர்களை உள்ளடக்கிய விசேட நீதிமன்றமொன்றை அமைப்பதற்கு உடன்பட்டனர்.

நீதிமன்றத்தில் வழக்கொன்றைத் தொடர்வதற்குப் போதிய சான்றுகள் இல்லாத போதிலும், மனித உரிமை மீறல் மேற்கொள்ளப்பட்டது எனச் சந்தேகிக்கப்படும் இராணுவ அங்கத்தவர்களை நிர்வாக ரீதியான செயல்முறையொன்று மூலம் சேவையிலிருந்து அகற்றும் பொறுப்பையும் அவர்கள் ஏற்றுக்கொண்டனர். இலங்கை முப்படையினரின் உயிர்ப்பினை மழுங்கடித்து, செயலிழக்கச் செய்வதே இதன் நோக்கமாகும்.

30/1 தீர்மானத்தின் பிரதான வாக்குறுதிகளைக் கூறியது போன்றே செயற்படுத்த முடியாமல் போயினும், அவற்றை வேறு வழிமுறையில் செயற்படுத்துவதற்கு நல்லாட்சி அரசு புதிய சட்டங்களை நிறைவேற்றியுள்ளது. 2016ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் நாடாளுமன்றத்தில் விவாதிப்பதற்கேனும் இடமளிக்காது, நல்லாட்சியாளர்கள் காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவலகச் சட்டத்தைப் பலாத்காரமாக நிறைவேற்றினர். 'அலுவலகம்' எனக் கூறினாலும் உண்மையில் அது, அழைப்பாணையிடுவதற்கு, சாட்சியாளர்களை அழைப்பதற்கு, விசாரணைகளை நடத்துவதற்கு அதிகாரமுடைய நியாயதிக்க சபையாகும். அதன் அதிகாரிகளுக்கு எந்தவொரு இராணுவ முகாம், பொலிஸ் நிலையம், சிறைச்சாலையையும் ஆணைப்பத்திரமின்றி சோதனை செய்து எந்தவொரு ஆவணத்தையும் அல்லது பொருளையும் தமது பொறுப்பிலெடுக்க முடியும்.

அரச இரகசியங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்குப் புறம்பாயினும், உளவுப் பிரிவினர், இராணுவத்தினர் உட்பட அனைத்து அரச நிறுவனங்களும் இந்தக் காணாமல்போன ஆட்கள் பற்றிய அலுவகத்துக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவது சட்டப்படி கடமையாகும்.

2018ஆம் ஆண்டு மார்ச் மாதம் மகா சங்கத்தினரின் கடுமையான எதிர்ப்பை ம் கருத்தில்கொள்ளாது காணாமல்போகச் செய்வதற்கு எதிரான சர்வதேச சாசனத்தை இலங்கையில் வலுப்பெறச் செய்வதற்காக 2018 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க சட்டத்தை நல்லாட்சியாளர்கள் நிறைவேற்றினர். உண்மையில் இதன் மூலம் காணாமல்போனவர்களைத் தேடுவது இடம்பெறுவதில்லை. இலங்கை இராணுவ அங்கத்தவர்களை வேட்டையாடும் பணியே இதன் மூலம் செய்யப்படுகின்றது.

இந்தச் சட்டத்தின் கீழ் இலங்கையினுள் காணாமல் ஆக்குதலொன்றைச் செய்தார் எனச் சந்தேகிக்கப்படும் நபரொருவரை வெளிநாடொன்றுக்கு நாடு கடத்தி, அவருக்கு எதிராக அந்த நாட்டில் வழக்குத் தொடர முடியும். அல்லது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் ஒப்படைக்க முடியும்.

2018ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், குற்றவியல் செயற்பாடுகளில் பரஸ்பர உதவிகளை வழங்கும் சட்டத்தில் நல்லாட்சி அரசு கொண்டு வந்த 24ஆம் இலக்கத் திருத்தச் சட்டம் மூலம் வெளிநாடொன்றுக்கு அல்லது சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு இலங்கையினுள் அவர்களுக்குத் தேவையான சந்தேகநபர்களை அல்லது சாட்சியாளர்களைக் கண்டறிய முடியும். அந்த வழக்குகளுக்குத் தேவையான சாட்சிகளை இலங்கையிலிருந்து பெற்றுக்கொள்வதற்கான பொறிமுறையை உருவாக்கலாம்.

ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளர், இலங்கையில் போர்க் குற்றங்களைச் செய்ததாக சந்தேகிக்கும் இராணுவ அங்கத்தவர்களுக்கு எதிராக தத்தமது நாடுகளில் வழக்குத் தொடருமாறு மேற்கத்தேய நாடுகளிடம் ஏற்கனவே கோரிக்கை விடுத்துள்ளார்.

2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் நல்லாட்சியாளர்கள் வெற்றி பெற்றிருப்பின், இந்த அனைத்தையும் செயற்படுத்தி இலங்கையைத் தீர்த்துக் கட்டியிருப்பார்கள். இந்த உள்நாட்டு, வெளிநாட்டு சூழ்ச்சிகளைத் தீர்மானமான முறையில் தோற்கடிக்க எமக்கு மிகவும் பலமான மக்கள் ஆணையொன்று தேவைப்படுகின் து.

2018 இன் இறுதியில் நல்லாட்சி அரசு இரண்டாகப் பிளவுற்று வீழ்ச்சியடைந்து கொண்டிருக்கும்போது தாம் உருவாக்கிய அந்த அரசைப் பாதுகாப்பதற்காக மேற்கத்தேய தூதரகங்களைச் சேர்ந்த அதிகாரிகள் நாடாளுமன்றத்தில் அதிதிகள் மாடத்தில் அமர்ந்தவாறு, நல்லாட்சியின் சபாநாயகர் மேற்கொண்ட நடவடிக்கைகளுக்குத் கைதட்டி, ஆரவாரத்துடன் உற்சாகமூட்டி ஒத்துழைப்பு வழங்கியமை உங்களுக்கு நினைவிருக்கும். ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த போதிலும் சூழ்ச்சியாளர்கள் தமது வேலையைக் கைவிடவில்லை என்பதை நாம் நன்கு புரிந்துகொள்ள வேண்டும்.

அரசியல் விடயங்களின்போது எப்போதும் பெரிய பிம்பத்தை மனதில் இருத்திக் கொள்ளுமாறு நான் பொது மக்களின் வேண்டிக் கொள்கிறேன். நாம் நாடு என்ற வகையில் எதிர்நோக்கியுள்ள சவாலுக்கு அமைவாக அரசியல் ரீதியாக முக்கிய விடயங்கள் யாவை, முக்கியமல்லாத விடயங்கள் யாவை என்பதைப் பிரித்தறிய முடியாவிடின் நாம் அழிந்து விடுவோம்.

ஆறுமுகம் தொண்டமானின் மரண வீட்டில் சமூக இடைவெளி சரியாகப் பின்பற்றப்பட்டதா, 2011 இல் யாராவது கிரிக்கட் போட்டி ஆட்ட மோசடியில் ஈடுபட்டார்களா போன்ற விடயங்கள் தொடர்பாக பலர் பலவாறான விடயங்களைக் கூறலாம். எனினும், அவை அரசியல் ரீதியாக முக்கியமானவை அல்ல.

2019ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த பின்பு நாம் எதிர்நோக்க வேண்டியேற்பட்ட பாரிய பிரச்சினையே கொரோனா வைரஸ் தொற்று ஆகும். அந்தப் பாரிய பிரச்சினைக்கு சிறப்பாக முகங்கொடுத்தோமா என்பதுதான் இங்கு முக்கியமாகும்.

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதில் உலக நாடுகள் மத்தியில் நாம் முன்னிலை வகிக்கின்றோம் என்பதைத் தெளிவாகக் கூறுகின்றேன். நியூசிலாந்துகூட எமக்குப் பின்னாலேயே உள்ளது.

2003 சார்ஸ் நோயின் பாதிப்பின் மூலமே வியட்நாம், ஹொங்கொங், தாய்வான் போன்ற நாடுகள் கொரோனா வைரஸ் போன்ற நோய்களை எவ்வாறு கட்டுப்படுத்துவது என்பதைக் கற்றுக்கொண்டன.

எமக்கு அவ்வாறான பெரிய அனுபவங்கள் எதுவுமின்றியே நாம் கொரோனா வைரஸ் தொற்றை இந்தளவு கட்டுப்படுத்தியுள்ளோம்.

வெளிநாட்டிலிருந்து வரும் தொற்றுடைய ஒருவர் சமூகத்துக்குச் சென்றால் மாத்திரமே இங்கு கொரோனா வைரஸ் பரவல் மீண்டும் ஏற்படும். நல்லாட்சிக் கும்பல் அதிகாரத்தில் இருந்திருப்பின் அவர்கள் கொரோனா வைரஸ் தொற்றை இவ்வாறு கட்டுப்படுத்தியிருப்பார்களா? நாம் முக்கியமான விடயங்கள் யாவை, முக்கியமற்ற விடயங்கள் யாவை என்பதை சரியாகப் புரிந்துகொண்டு, எப்போதும் பெரிய பிம்பம் தொடர்பாக சிந்தித்தால் மாத்திரமே எமது மக்களுக்கு வெற்றி பெற முடியும்.

கருணா அம்மான் புலிகள் அமைப்பில் இருந்தபோது இராணுவ முகாம்களைத் தாக்கி ஆயிரக்கணக்கான இராணுவத்தினரைக் கொலை செய்தார் எனக் கூறினார் என்று நல்லாட்சி எதிர்க்கட்சியினர் துள்ளிக் குதிப்பதை நாம் அண்மையில் அவதானித்தோம். பெரிய பிம்பத்தை மறைத்து, வேறு விடயங்களைப் பெருப்பித்துக் காட்டுவது எவ்வளவு இலகு என்பது அதன் மூலம் வெளிப்படுகின்றது.

2005ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நான் ஜனாதிபதியான பின்பு, நாம் புலிகள் அமைப்பை முழுமையாக அழித்தொழித்தோம். கருணா அக்காலத்தில் தீவிரவாதத்தையும், பிரிவினைவாதத்தையும் கைவிட்டு, புலிகள் அமைப்பிலிருந்து விலகி, இராணுவ உளவுப் பிரிவுக்கு அடிபணிந்தமையால் அவர் புலிகள் அமைப்புடன் அழிந்து போகவில்லை. பிரபாகரனின் சடலத்தை இனங்காண்பதற்கு நாம் கருணாவையே அனுப்பி வைத்தோம்.

'கருணா இவ்வாறு கூறினார். அதனால் உங்களது பெறுமதியான வாக்கை நல்லாட்சித் தரப்பினருக்கு வழங்குங்கள்' என்று கோரும் குழுவினர் செய்தவற்றையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

(10ஆம் பக்கம் பார்க்க)

## படகு பழுதாகி மூன்று நாள்கள் நடுக்கடலில் தத்தளித்த

# 4 ராமேஸ்வரம் மீனவரை இலங்கைக் கடற்படை மீட்டு இந்தியக் கடற்படையிடம் பாதுகாப்பாக கையளித்தது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜூன் 30

படகு பழுதாகிய நிலையில் மூன்று நாள்களாக நடுக்கடலில் தத்தளித்த இந்திய ராமேஸ்வரம் மீனவர்களை இலங்கை கடற்படை மீட்டு சர்வதேச கடல் எல்லையில் வைத்து இந்தியாவிடம் ஒப்படைத்தது.

விசைப்படகு பழுதானதால் கடந்த மூன்று நாள்களாக நடுக்கடலில் தத்தளித்த நான்கு ராமேஸ்வரம் மீனவர்களை மீட்ட இலங்கை கடற்படை விசாரணையின் பின் பழுதான விசைப்படகுடன் மீனவர்கள் நால்வரையும் பத்திரமாக இந்திய கடலோரக் காவல் படையிடம் ஒப்படைத்தது.

ராமேஸ்வரத்ததை சேர்ந்த கிருஷ்ண வேணி என்பவருக்குச் சொந்தமான விசைப்படகில் ராமேஸ்வரம் பகுதியை



சேர்ந்த செல்வகுமார், பசீர், அண்ணாதுரை, சீனி ஆகிய நான்கு மீனவர்கள் கடந்த சனிக்கிழமை காலை ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து மீன் பிடிக்கக் கடலுக்குள் சென்றனர்.

மீனவர்கள் சனிக்கிழமை இரவு நடுக்கடலில் மீன்பிடி தொழிலில் ஈடுபட்டு கொண்டிருந்த போது விசைப்படகில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டு படகு நடுக்கடலில் பழுதாகியது. இதனால் படகில் இருந்த மீனவர்களால் கரைக்குதிரும்ப முடியாமல் நடுக்கடலில் தத்தளித்துள்ளனர். அப்போது விசைப் படகு கடல் சீற்றம் காரணமாக இலங்கை பகுதியான மன்னார் கடல் பகுதியை அடைந்துள்ளது.

இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை மாலை அவ்வழியாக ரோந்து பணியில் ஈடுபட்டு கொண்டு இருந்த இலங்கைக் கடற்படையினர் மீனவர்களையும், படகையும் மீட்டு சர்வ தேசக் கடல் எல்லையில் வைத்து விசாரணை நடத்தி பின் இந்தியக் கடலோரக் காவல் படைக்கு சொந்தமான ராணி துர்க்கா தேவி என்ற ரோந்து கப்பலில் வந்த இந்தியக் கடற்படையிடம் மீனவர்களையும் விசைப்படகையும் ஒப்படைத்தனர்.

ஒப்படைக்கப்பட்ட நான்கு மீனவர்களையும், படகையும் இந்திய கடலோர காவல்படை கப்பல் ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகம் அருகே வைத்து சக மீனவர்களிடம் ஒப்படைத்தனர். பின் கரைக்கு அழைத்து வரப்பட்ட மீனவர்களிடம் உளவுத்துறை, வட்டாச்சியர், கடலோர காவல் குழுமம் மற்றும் மீன் வளத் துறை அதிகாரிகள் விசாரணை நடத்திய பின்பு உறவினர்களிடம் ஒப்படைத்தனர்.

# அரசியல் முகவர்களை அடையாளம் கண்டு தக்க பாடம் புகட்ட வேண்டும்

## கிளிநொச்சி மக்கள் சந்திப்பில் தபேந்திரன்



சமூகத்தின் உரிமை,விடுதலை அரசியலை முன்னெடுத்து வரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தோற்கடிப்பதற்கு, தென்னிலங்கை முகவர்கள் களமிறக்கப்பட்டுள்ளனர். அவர்களை மக்கள் அடையாளம் கண்டு தக்க பாடம் புகட்ட வேண்டும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் வேதநாயகம் தபேந்திரன் தெரிவித்தார்.

தேர்தலில் போட்டியிடுவது தொடர்பில் கிளிநொச்சியில் மக்கள் சந்திப்பில் உரையாற்றிய அவர் -

எனது கன்னி அரசியல் பிரவேசம் கடும் சவால் நிறைந்ததாகவுள்ளது. தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை கொச்சைப்படுத்தும் நோக்கில் களமிறக்கப்பட்டுள்ள முகவர்களை நாம் அடையாளம் காண வேண்டும். இவர்களைத் தோற்கடிப்பதில் தான் எமது சமூகத்தின் எழுச்சியும் உள்ளது.

அற்ப இலாபங்களுக்காக தமிழர்களின் ஒட்டு மொத்த இலட்சியங்களை நாம் இழந்திவிட முடியாது. எனவே, எனது முயற்சியில் நம்பிக்கை ஏற்படுத்துவது, வாக்காளர்களின் கைகளிலே உள்ளது. பேரினவாத சக்திகளுக்கு ஆதரவாகக் களமிறக்கப்பட்டுள்ள வேட்பாளர்கள் வெல்வது, எமது நீண்ட கால உரிமைப் போராட்டத்தை மலினப்படுத்தும். எனவே, இவ்விடயத்தில் தமிழர்கள் நன்கு சிந்தித்துச் செயற்படுவது அவசியம்.

யாழ். சுண்டுக்குழியை பிறப்பிடமாகக் கொண்ட நான், போராட்ட காலத்து தமிழர்களின் வலிகளை நன்கு அறிந்து வைத்துள்ளேன். வேறு கட்சிகளில் போட்டியிடுபவர்கள் போன்று, திக்குத் திசை தெரியாத இடத்திலிருந்து வந்து போட்டியிடவில்லை - என்றார்.

# மன்னார் மாவட்டச் செயலாளர் திங்களன்று ஓய்வு பெறுகின்றார்

## அடுத்து யார் என்பதில் இன்னும் முடிவில்லை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம்,ஜூன்30

மன்னார் மாவட்டச் செயலாளர் எதிர்வரும் திங்கட் கிழமை ஓய்வு பெற்றுச் செல்லும் நிலையில் பதில் கடமைப் பொறுப்புக்களைக் கையளிப்பதில் பெரும் அரசியல் தலையீடுகள் காணப்படுவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

மன்னார் மாவட்டச் செயலாளர் கி.அ.மோகன்ராஸ் எதிர்வரும் திங்கட்கிழமையுடன் பணியில் இருந்து ஓய்வு பெறும் நிலையில் பொறுப்புக்களைக் கையளித்துச் செல்ல ஏற்ற ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு அவருக்கு கடந்த வாரமே பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சில் இருந்து முறைப்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

பொறுப்புக்களைக் கையளிக்குமாறு அறிவித்த அமைச்சின் செயலாளர் யாரிடம் கையளிக்க வேண்டும் என இந்த நேரம் வரையில் அறிவிக்காத காரணத்தினால் ஓர் குழப்பமான நிலைமையே காணப்படுகின்றது. மாவட்டத்தில் இப்போது இரு மேலதிக செயலாளர்கள் உள்ள வேளை ஒருவர் 3 ஆண்டுகளாகப் பணியில் உள்ளார். அதேநேரம் மேலும் ஒருவர் இந்த ஆண்டு ஆரம்பத்தில் நியமிக்கப்பட்டபோதும் நிர்வாக சேவையில் அவர் மூத்தவர் எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

இந்த நிலையில் இதில் எவரிடம் பொறுப்புக் கையளிக்கப் படும் என்பது தொடர்பிலேயே கருத்து வேறுபாடு காணப்படுகின்றது.

# இளைய சகோதரன் இறந்த அதிர்ச்சியில் அவரது உடலுக்கு அருகில் விழுந்து உயிரிழந்த சகோதரி

தனது இளைய சகோதரன் திடீரென இறந்த காரணத்தால், அதிர்ச்சியடைந்த மூத்த சகோதரி சகோதரனின் உடலுக்கு அருகில் மயங்கி விழுந்து உயிரிழந்த சம்பவம் ஒன்று கேகாலை பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது.

கேகாலை – பரகம்மான, எகிரியகல பிரதேசத்தை சேர்ந்த 65 வயதான ஜயலத் ராலலாகே சாதி மெனிக்கே என்ற இரண்டு பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பெண்ணின் சகோதரனான கலிகமுவை, தம்மல பிரதேசத்தை சேர்ந்த ஜயலத் ராலலாகே தயானந்த பண்டார என்ற மூன்று பிள்ளைகளின் தந்தை கேகாலை, அம்பன்பிட்டிய பிரதேசத்தில் நிறுவனம் ஒன்றில் பாதுகாப்பு அதிகாரியாகக் கடமையாற்றி வந்துள்ளார்.

இவர் சுகவீனம் காரணமாக கடந்த ஒன்றரை மாதங்களாக வேலைக்குச் செல்லவில்லை எனக் கூறப்படுகின்றது. இந்த நிலையில், சுகவீனம் காரணமாக கடந்த 23 ஆம் திகதி கேகாலை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். எனினும், மறுநாள் உயிரிழந்துள்ளார்.

இவரின் உடல் கடந்த 25 ஆம் திகதி தம்மல பிரதேசத்தில் உள்ள வீட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. சகோதரனின் உடலைக் காண அவரது மூத்த சகோதரி வீட்டுக்குச் சென்றுள்ளார்.

வீட்டுக்குச் சென்றிருந்த அந்தப் பெண், 'ஐயோ எமது தம்பிக்கு என்ன நடந்தது?' எனக் கூறிகதறி மயங்கி கீழே விழுந்துள்ளார்.

கீழே விழுந்த பெண்ணை உடனடியாக அருகிலுள்ள வெலிகல வைத்தியசாலைக்கு உறவினர்கள் கொண்டு சென்றுள்ளனர்.

இதன்போது குறித்த பெண்ணைப் பரிசோதித்த மருத்துவர் பெண் இறந்துவிட்டார் எனக் கூறியுள்ளார்.

இதையடுத்து உயிரிழந்த பெண்ணின் சடலம் கேகாலை எகிரியகல வீட்டுக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

# ஹெரோயினுடன் இளைஞர் கைது

வவுனியாவில் நேற்று இளைஞர் ஒருவர் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டுள்ளார் என வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் செயற்படும் போதை ஒழிப்புப்பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

நேற்றுப் பிற்பகல் வவுனியா மகாறம்பைக்குளம் பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் சிலர் போதைப் பொருள்களுடன் நடமாடுகின்றனர் என வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் தம்மிக்க பிரியந்த தலைமையின் கீழ் செயற்படும் போதை ஒழிப்புப்பிரிவினருக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் அங்கு சென்ற போதை ஒழிப்பிரிவினர் சிறீராமபுரம் பகுதியை சேர்ந்த 18 வயதுடைய இளைஞரைக் கைது செய்துள்ளனர்.

# தொல்பொருள் தேடினராம் நால்வர் கைது

வெலிமடை, கிரிவெல் பெத்த வனப்பகுதியில் தொல்பொருள் தேடி அகழ்வு நடவடிக்கையில் ஈடுபட்ட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளுக்காக வெலிமடை பொலிஸ் நிலையத்தில் சந்தேகநபர்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# கருணாவுக்கு வெள்ளையடிப்பு செய்யவே மஹிந்த ராஜபக்ஷவின் விசேட அறிவிப்பு



## தங்களின் ஆட்சியில் அவர் தப்பிக்கவே முடியாது என்கிறார் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித்

**கொழும்பு, ஜூன் 30**

**பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் விசேட உரையானது, பயங்கரவாதியான கருணா அம்மானுக்கு வெள்ளையடிப்பு செய்யும் வகையிலேயே அமைந்துள்ளது.**

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் அக்கட்சியின் பிரதமர் வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பிரதமரால் நேற்றுமுன்தினம் விடுக்கப்பட்ட விசேட அறிவிப்பு தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் சஜித் பிரேமதாஸ மேலும் கூறியதாவது:-

விசேட அறிவிப்பொன்றை விடுத்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பல விடயங்களை குறிப்பிட முயற்சித்திருந்தாலும் இறுதியில் கருணா அம்மானுக்கு வெள்ளையடிப்பு செய்வதே அவரின் பிரதான நோக்கமாக இருந்தது. உரையின் சாராம்சமும் அதுவே. கருணா அம்மான் விடுத்த அறிவிப்பின் பாரதூரத் தன்மை இந்த நாட்டின் பிரதமருக்கு விளங்கவில்லையா? கருணாவின் அறிவிப்பை அடிப்படையாகக்கொண்டு தேர்தல் பற்றி முடிவெடுக்கவேண்டாம் எனவும் பிரதமர் மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஒரு நாளில் 3 ஆயிரம் இராணுவத்தினரைக் கொன்றேன் என்ற கருணாவின் அறிவிப்பை எப்படி சிறு விடயமாகக் கருத முடியும்? இது மிகவும் பாரதூரமான அறிவிப்பாகும். எனவே, கருணாவுக்கு கருணை காட்டுவதை அரசு நிறுத்தவேண்டும். பொதுத்தேர்தலின் பின்னர் எமது கைகளுக்கு ஆட்சி அதிகாரம் வந்ததும், கருணா அம்மானை நிச்சயம் சட்டத்தின் முன் நிறுத்தியே தீருவோம் - என்றார்.

## விசாரணைக் குழு நடவடிக்கைகளில் சிக்குண்டு கிடக்கும் யாழ். செயலகம்

**(ந.லோகதயாளன்)**

**யாழ்ப்பாணம்,ஜூன்30**

யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் தொடர்பில் மாறி மாறி தொடராக முறைப்பாடுகள் மட்டுமே அமைச்சில் குவிக்கப்படுவதனால் மாவட்டச் செயலகம் தொடர்பில் விசாரணைக் குழுக்களை நியமிப்பதிலேயே அமைச்சின் காலம் செல்வதாகப் பெயர் குறிப்பிட விரும்பாத அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்துல் நிவாரண விநியோகத்திற்காக வழங்கப்பட்ட பொருள்களை சூறையாடி வேறு நபர்கள் விநியோகித்ததாக வெளியான செய்தியை அடுத்து ஒரு விசாரணை இடம்பெற்றது.

இதற்குப் பதிலடியாக மாற்றுத் தரப்புக்கள் தேடிப்பிடித்து அவசர அவசரமாக முன்னாள் மாவட்டச் செயலாளர் தொடர்பில் குற்றப்பத்திரம் போன்று ஒன்று சமர்ப்பிக்கப்பட்டு அதனை உடனடியாவே விசாரணை செய்ய அரசியல் அழுத்தமும் வழங்கப்பட்டது.

பொறியியலாளர், கணக்காய்வாளர் உள்ளிட்ட ஐவர் அடங்கிய குழு மாவட்டச் செயலகம் வந்து சம்பந்தப்பட்ட ஆவணங்களைப் பரிசீலனை செய்தது. அதில் தவறு ஏதும் இல்லை என்ற நிலையில் மீண்டும் முயற்சிப்போம் என்னும் பாணியில் திரும்பிச் சென்றது.

தற்போது மற்றுமோர் அணியும் சில முக்கிய ஆவணங்கள் சகிதம் இரு உயர் அதிகாரிகள் தொடர்பில் குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளமையோடு ஆவணங்களும் காத்திரமாகவே இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால் விரைவில் அடுத்த கட்ட விசாரணைக்குழு யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகம் வரவுள்ளது.

புதிய செயலாளர் மாவட்டத்திற்குப் பணியை பொறுப்பெடுத்த காலம் முதல் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் விசாரணைக் குழுவிற்கு மட்டும் பஞ்சம் இல்லை என மாவட்டச் செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## ரவி கருணாநாயக்கா, அர்ஜூன் அலோசியஸ் மீதான பிடியாணை தொடர்பில் வரும் 7 ஆம் திகதி கட்டளை

### மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அறிவிப்பு



கொழும்பு, ஜூன் 30

பிணைமுறி விவகாரத்தில் முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கா மற்றும் அர்ஜூன் அலோசியஸ் உட்பட ஆறு பேருக்கு எதிராக கோட்டை நீதிவான் நீதிமன்றத்தினால் விடுக்கப்பட்ட பிடியாணைக்கு எதிரான ரிட் மனுவின் கட்டளை எதிர்வரும் ஜூலை 7 ஆம் திகதி பிறப்பிக்கப்படும் என மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்திருக்கிறது.

கடந்த மார்ச் மாதம் 6 ஆம் திகதி கோட்டை நீதிவான் நீதிமன்றத்தினால் முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கா மற்றும் அர்ஜூன் அலோசியஸ் உட்பட ஆறு பேருக்குப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த உத்தரவுக்கு எதிராக - இடைக்காலத் தடையுத்தரவு கோரி முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கா ரிட் மனு ஒன்றினை மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கு நேற்று திங்கட்கிழமை மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் நீதியரசர் ஏ.எச்.எம்.டி. நவாஸ் தலைமையிலான மூன்று நீதியரசர்கள் அடங்கிய ஆயத்தின் முன் பரசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கின் கட்டளை எதிர்வரும் ஜூலை 7 ஆம் திகதி பிறப்பிக்கப்படும் என மூன்று நீதியரசர்கள் அடங்கிய ஆயம் அறிவித்தது. (ம)

## வெளிநாடுகளை சேர்ந்த 15 பேர் தேர்தல் கண்காணிப்புக்கு வருவர்

தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கையில் வெளிநாடுகளை சேர்ந்த 15 கண்காணிப்பாளர்களை பணியில் அமர்த்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு அனுமதியளித்துள்ளதாக 'பவ்ரல்' அமைப்பு தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸை வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தியுள்ள பல நாடுகளில் இருந்து கண்காணிப்பாளர்களை இலங்கைக்கு அழைப்பதற்கான அனுமதி கிடைத்துள்ளதாகவும் 'பவ்ரல்' தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு வரவுள்ள தேர்தல் கண்காணிப்பாளர்கள் பி.சி.ஆர். சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என தெரிவித்துள்ள 'பவ்ரல்' அமைப்பு இலங்கையின் சுகாதார வழிகாட்டுதல்களின் படி இவர்கள் 14 நாட்கள் தனிமைப்படுத்தப்படுவார்கள் என குறிப்பிட்டுள்ளது.

## கருணாவை விட...

இவர்கள் 1989 இல் பயங்கரவாதிகளின் மனதை வெற்றிகொள்வதற்காக முட்டாள்தனமாக பல ஆயுத லொறிகளையும், பணம் நிரம்பிய பல கோணிப் பைகளையும் புலிகள் அமைப்புக்கு வழங்கினர்.

அதன் பின்பு புலிகள் அந்த ஆயுதங்களைக் கொண்டே எம்மைத் தாக்கினர். 2002 இல் அவர்கள் போர் நிறுத்த ஒப்பந்தம் மூலம் வடக்கு, கிழக்கு ஆகிய இரண்டு மாகாணங்களையும் பிரபாகரனுக்கு எழுதிக் கொடுத்தனர். நல்லாட்சி அரசின் காலத்தில் நாட்டைப் பிரிப்பதற்காக புதிய அரசமைப்பொன்றை வரைவு செய்தனர். அதன் பின்பு அந்தப் பிரிவினைவாத அரசமைப்பின் கோட்பாடுகள் அனைத்தையும் 2019ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் கொள்கைப் பிரகடனத்திலும் உள்ளடக்கினர்.

கருணா கொலைகளைச் செய்த காலத்திலும், அதன் பின்பும், இன்று வரையும் நல்லாட்சித் தரப்பினரின் நிகழ்ச்சி நிரல் நாட்டைப் பிளவுபடுத்துவதாகும். கருணா கொலைகளைச் செய்வதைக் கைவிட்டுள்ள போதிலும், நல்லாட்சியாளர்கள் நாட்டைப் பிளவுபடுத்துவதைக் கைவிடவில்லை. அதனையே நாம் இங்கு புரிந்துகொள்ள வேண்டும். எவ்வாறாயினும் கருணா கூறியவை தொடர்பாக தற்போது சி.ஐ.டியினரால் விசாரணையொன்று நடத்தப்படுகின்றது. எனவே, சிறிய பிம்பத்தை அவதானித்தவாறு, பெரிய பிம்பத்தை நாம் சிறிதளவேனும் மறந்து விடுவோமாயின் அழிவுதான் ஏற்படும். அதனால்தான் எப்போதும் சிறிய பிம்பத்தை நோக்காது, பெரிய பிம்பம் தொடர்பாகவே அவதானம் செலுத்த வேண்டும் என்பதை நான் வலியுறுத்துகின்றேன்.

சிறிய சில்லறை விடயங்களின் அடிப்படையில் வாக்களிப்போமாயின், எமது நாடு, நாட்டினம், சமயம், கலாசாரம், எதிர்கால சந்ததியினரின் எதிர்காலம் அனைத்தும் இல்லாமல் போய் விடும். இந்த நாட்டை யாருக்கு சிறப்பாக ஆட்சி செய்ய முடியும், பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்தக் கூடியவர்கள் யார், யாருக்கு தீவிரவாதத்தை ஒழித்து மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும், தேர்தல்களை உரிய காலத்தில் நடத்தி ஜனநாயகத்தை உறுதிப்படுத்தக் கூடியவர்கள் யார், எதிர்கால சந்ததியினருக்கு சுதந்திரமாக வாழ முடியுமான, பெருமையடைய முடியுமான இலங்கையைக் கட்டியெழுப்பக் கூடியவர்கள் யார்? போன்றவை தொடர்பான கேள்விகளையே மக்கள் எப்போதும் தம்மைத்தாமே கேட்டுக்கொள்ள வேண்டும். இவற்றுக்கான பதில் யாது என்பதை நான் கூற வேண்டியதில்லை. அதனை சகல இலங்கையரும் அறிவார்கள் - என்றார்.

## இனி இது...

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவருக்கு எதிராக இவ்வாறு பகிரங்கமாக – அபாண்டமாக – குற்றம் சுமத்தப்பட்டால், அது குறித்து அந்த வேட்பாளர் தேர்தல் ஆணையத்திடம் முறையிட முடியும். தேர்தல் ஆணையம் தான் நேரடியாகவோ அல்லது பொலிஸ் மூலமோ விசாரணை நடத்தும். வழக்கு விசாரணை போல அது காலம் இழுபடாது. விரைந்து முன்னெடுக்கப்பட்டு தீர்க்கமான ஒரு முடிவு எட்டப்படும்.

சுமந்திரனுக்கு எதிராக இந்த நான்கு அம்மணிகளும் பகிரங்க வெளியில் சுமத்திய 21கோடி ரூபா மோசடி குற்றச்சாட்டுத் தொடர்பில் அப்படிப் பகிரங்கமாகக் குற்றம் சுமத்திய தரப்பகளிடம் தேர்தல் ஆணையம் விசாரணை நடத்தும். கேள்விகள் எழுப்பும். மானநஷ்டம் ஏற்படுத்தக் கூடிய குற்றச்சாட்டுகளுக்கான விளக்கங்கள் கோரப்படும். ஆதாரங்கள், சான்றுகளை சமர்ப்பிக்குமாறு கேட்கப்படும்.

சரியான பதில்கள், விளக்கங்கள் முன்வைக்கப்படாவிட்டால் தேர்தல் ஆணையமே காத்திரமான முடிவை எடுக்கும்.

*'அரசன் அன்று கொல்வான். தெய்வம் நின்று கொல்லும்'* என்பார்கள்.

இங்கு தேர்தல் ஆணையம் விரைந்து முடிவெடுக்கும் – அரசன் அன்று கொல்வது போல.

நீதிமன்றம் காலம் இழுத்து நடவடிக்கை எடுக்கும் – தெய்வம் நின்று கொல்வது போல.

இந்த அபாண்டக் குற்றச்சாட்டு விடயத்தில் அன்று கொல்லும் நடவடிக்கையும் எடுக்கப்பட போகின்றது. நின்று கொல்லும் நடவடிக்கையும் இடம்பெறப் போகின்றது.

மருந்தைச் சரியாகக் கொடுத்தால் உள்ளேயிருப்பது வெளியே வந்துதானே ஆக வேண்டும்...?

நடவடிக்கை இறுக்கமாக இருந்தால், அம்பு மட்டும் சிக்காது, எய்தவரும் – அல்லது எய்தவர்களும் – சிக்குவர்.

என்ன நடக்கப் போகின்றது என்பது காலம் பிந்தாமல் விரைவில் தெரியவரும் எனக் காத்திருக்கலாம்.

–மின்னல்–

---

## அம்மானை....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

அறிக்கையால் நாங்கள் மிகுந்த வருத்தத்தில் இருக்கிறோம். கருணா அம்மானை வெள்ளையடிக்கும் அரசியல் தலைவர்கள் குறித்து எங்களுக்கு இன்னும் வருத்தம் இருக்கிறது.

இந்த நேரத்தில், தேர்தல் தொடர்பான கடுமையான விதிகள் செயல்படுத்தப்படுகின்றன. இந்தச்சட்டவிரோத கொலைகாரன் மீது தேர்தல் ஆணையத் தலைவரின் நடவடிக்கைகளை ஒரு சமூகமாக நாங்கள் கவனித்து வருகிறோம்.

சட்டவிரோத ஆயுதம் வைத்திருந்ததற்காக சமீபத்தில் ஆயுள் தண்டனை அனுபவித்த உவடன்னசுமன சிறையில் அடைக்கப்பட்டார். ஆயிரக்கணக்கான போர்வீரர்கள் கொல்லப்பட்டதாகத் தனது சொந்த வாயால் சாட்சியமளிக்கும் இந்த கொலைகாரனுக்கு இந்த தீர்ப்பை வழங்கிய நீதித்துறை என்ன நடவடிக்கை எடுத்துள்ளது என்ற கேள்வி எழுகிறது – என்றார்.

---

# மக்கள் நிராகரிப்பார்களாயின் அரசியலிலிருந்து விலகுவேன்

## கூறுகின்றார் குணசீலன்

வவுனியா, ஜூன் 30

நாடாளுமன்ற தேர்தலில் மக்கள் நிராகரிப்பார்களாயின் அரசியலில் இருந்து முழுமையாக ஓய்வு பெறுவேன் எனத் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் வன்னி மாவட்ட வேட்பாளர் வைத்தியர் ஜீ.குணசீலன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மக்கள் ஒவ்வொரு முறையும் கட்சிகளை நம்பி தங்களுடைய வாக்குகளை வழங்கி வருகின்றனர். ஆனால், இதுவரை காலமும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் அல்லது அவர்களின் அடிப்படை பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் நாங்கள் முன்னெடுத்த நடவடிக்கைகள் என்ன என்பது தொடர்பாகச் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

மேலும் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு வித்தியாசமான சூழ்நிலையினை நாங்கள் எதிர்நோக்க உள்ளோம். அதாவது வடக்கு – கிழக்கு தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கைக்கு அடையாளமாக திகழ்ந்த கட்சிக்கு இடையே குழப்பம் மற்றும் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக அமுல்படுத்தப்பட்டிருந்த ஊரடங்கினை தொடர்ந்து எதிர்நோக்கிய பொருளாதார நெருக்கடி ஆகிய பல்வேறு பிரச்சினைகளுக்கு மத்தியில் இந்தத் தேர்தலுக்கு மக்கள் முகம் கொடுத்துள்ளனர்.

எனவே மக்கள், சிந்தித்து வாக்களிக்க வேண்டும். பல கட்சிகள் இம்முறை போட்டியிடுகின்றன. வன்னியில் சுயேச்சைக் குழுக்கள் அதிகளவு களமிறக்கப்பட்டுள்ளன. எனினும் மக்களின் முடிவுதான் முக்கியமானதாக உள்ளது. ஆகவே மக்கள் எனக்கு ஆதரவு வழங்கினால் சேவை செய்யத் தயாராக இருக்கின்றேன். மாறாக நான் தேவையில்லை, அரசியலை விட்டு ஒதுங்க வேண்டும் என மக்கள் நினைத்தால் அரசியலில் இருந்து நிரந்தரமாக ஓய்வு பெற்றுச் செல்லவும் தயாராக இருக்கின்றேன் – என்றார்.

---

# இருவருக்கு தொற்று உறுதி

கொழும்பு, ஜூன் 30

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் இருவர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவர்கள் அண்மையில் பங்களாதேஷில் இருந்து நாடு திரும்பியவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து, இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை 2039ஆக அதிகரித்துள்ளது.

---

## வட்டுக்கோட்டை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மல்லாகம், நீதிமன்ற வீதி, குழமங்காலில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் பரப்புரைக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறினார். அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு:–

இந்தத் தேர்தலில் தமிழ் மக்கள் சில விடயங்களை தெளிவாக புரிந்துகொண்டு வாக்களிக்க வேண்டும் என்று உங்கள் ஊடாக எனது தமிழ் உறவுகளிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

மக்கள் ஆணையான வட்டுக்கோட்டை தீர்மானத்தை கைவிடுவதாக நாம் அறிவிக்கவில்லை. நாம் அதனால்தான் நேற்றைய தினம் (சனியன்று) எமது அங்குரார்ப்பணத் தேர்தல் கூட்டத்தை அந்த தீர்மானத்தை இயற்றிய இடத்தில் – வழக்கம்பரை அம்மன் கோயில் முன்றிலில் – வைத்தோம். அன்று எடுத்த வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் உள் அர்த்தம் 44 வருடங்களுக்குப் பிறகும் உண்மையை உணர்த்துவதாக அமைந்துள்ளதாக நாங்கள் காண்கின்றோம்.

அதனால்த்தான் நாங்கள் வட கிழக்கு இணைப்பு சாத்தியம் என்று கூறி எமது தாயகக் கோட்பாட்டை கைவிடாது பற்றி நிற்கின்றோம். சர்வதேச சட்டப்படி நாங்கள் ஒரு தனித்துவமான மக்கட் கூட்டம். நாமே இந் நாட்டின் ஆதிக்குடிகள் என்பதை நாம் உரத்துக் கூறி வருகின்றோம். அதனால் எம்மை நாமே ஆள எமக்குரித்துண்டு என்பதை தென்னவர்களுக்குக் கூறி வருகின்றோம்.

அடுத்து நாங்கள் சிலர் போல் முள்ளிவாய்க்காலில் இனவழிப்பு நடைபெறவில்லையென்று கூறத்தயாரில்லை. மாறாக, வட மாகாண சபையில் நாம் இயற்றிய இன அழிப்பு தீர்மானத்தை சர்வதேச ரீதியாக நிரூபிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுவருகின்றோம்.

மேலும் நல்லாட்சிக்கு ஆதரவளிப்பதாக கூறி நாம் ஐ.நா சபையில் இனப்படுகொலையாளிகளைப் பிணை எடுக்கவில்லை. எடுக்கவும் மாட்டோம். மாறாக அன்றைய அமெரிக்கப் பிரதிநிதி நிரா பிஸ்வால் இலங்கைக்குக் கால நீட்சியைக் கொடுக்க வேண்டும் என்று எம்மிடம் கூறிய போது அதை வெகுவாகக் கண்டித்தேன். அதற்கு மேலும் கூறுவதானால் முள்ளிவாய்க்கால் இனவழிப்புக்கான சர்வதேச யுத்த குற்ற விசாரணையை அரசியல் தீர்வு வரப்போகின்றது என்ற கானல் நீரைக் காட்டி மழுங்கடித்தவர்கள் நாம் அல்லர். இவை எல்லாம் இது வரையில் நடைபெற்ற திருகுதாளங்கள்.

மேலும் உரிமை அரசியல் என்று முழக்கமிட்டு, கம்பெரேலிய என்ற சலுகை அரசியலுக்குள் மக்களை நாம் முடக்கவில்லை. நெல்சன் மண்டேலா என்று சிங்கள இனப்படுகொலையாளிகளை நாம் புகழவில்லை.

எம்மை அரசாங்கம் ஏமாற்றிவிட்டது என்று ஏமாளிகளாய் உங்கள் முன் வரவில்லை. இவற்றை உங்களுக்குச் சொல்ல வேண்டிய காலம் கனிந்துள்ளது. அதனால்தான் இவற்றை இங்கு குறிப்பிடுகின்றேன். வட மாகாண சபையின் ஆட்சிக் காலத்தில் அரசாங்கத்துக்கு அடிபணிந்து நாம் எமது அரசியல் உரிமைகளை ஒருபோதும் விட்டுக்கொடுக்கவில்லை. ஜனாதிபதி, பிரதமர் முன்பாக எமது நாக்கை அடக்கி வைக்குமாறு மறைமுகமாக கூட்டமைப்பின் தலைமை என்னைப் பல முறை எச்சரித்தபோதும் நான் எனது மக்களுக்குத் துரோகம் செய்யவில்லை. அதனால்தான் என்னைப் பதவியில் இருந்து நீக்க நடவடிக்கை எடுத்தார்கள்.

நான் பதவியில் இருந்தபோது, பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொண்டேன். ஆனால், நான் எதுவும் செய்யவில்லை என்று அப்பட்டமான பொய்களைக் கூறிவருகின்றார்கள். குறிப்பாக, மத்திய அரசாங்கத்தின் நிதியை மீள திரும்ப அனுப்பியதாக கூறி மக்களை நம்ப வைக்கப் பார்க்கின்றார்கள். எனது காலத்தில் ஒரு சதம் நிதியையும் நான் திரும்ப அனுப்பவில்லை என்பதே உண்மையானது. பலமுறை இதைக் கூறிவிட்டேன். ஆனால் தொடர்ந்து எம்மைப் பற்றி பொய்கள் கூறப்பட்டு வருகின்றன. ஒரு பொய்யை ஆயிரந் தடவைகள் கூறினால் அது உண்மையாகிவிடும் என்ற கணிப்பில் அவர்கள் அவ்வாறு கூறுகின்றார்களோ தெரியாது.

பொதுவாக நாம் விமர்சன அரசியல் செய்ய விரும்புவதில்லை. ஆனால் சில விடயங்களைச் சுட்டிக்காட்டவேண்டி இருந்தது. அதனையே நான் செய்தேன்.

எம்மிடம் மாற்று வழிகள் இருக்கின்றன. நாம் என்ன செய்யப்போகின்றோம் என்ற தெளிவான சிந்தனை எம்மிடம் இருக்கின்றது.

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியில் இணைந்துள்ள கட்சிகள் தயாரித்துள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையில் எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கு நாம் மேற்கொள்ளவிருக்கும் சில நடவடிக்கைகள் பற்றி குறிப்பிட்டுள்ளோம். தமிழ் மக்கள் இன்று நடுத்தெருவில் நிற்பதற்கு காரணம், தமிழ் தேசிய கூட்டமைப்பில் ஒரு சிலர் தாம் நினைத்தபடி முடிவுகளை எந்த விதமான ஆராய்வுகளும் இன்றி எடுத்து அவற்றை நடைமுறைப்படுத்தி வந்தமைதான்.

உலகின் ஆதிக்குடிகளில் ஒன்றான எமது இனத்தின் பிரச்சினை தொடர்பில் எவ்வாறு ஓரிரு நபர்கள் தாம் நினைத்தபடி முடிவுகளை எடுக்க முடியும்? இது எத்தனை ஆபத்தானது? ஆகவே, கூட்டமைப்பு செயற்பட்டது போல தமிழ் மக்களின் எதிர்காலத்தை தனி ஒருவர் தீர்மானிக்கும் வகையில் நாம் செயற்படமாட்டோம். உலகம் பூராகவும் பரந்துவாழும் எமது மக்கள் மத்தியில் பல மேதைகளும் அறிஞர்களும் இருக்கின்றார்கள். அவர்களை எல்லாம் உள்வாங்கி நாம் கூட்டாகச் செயற்படுவோம். எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கான உலகளாவிய சிந்தனைக் கூடம் ஒன்றையும், மற்றும் அரசியல் பொருளாதார மற்றும் சமூக மேம்பாடுகளுக்காக ஆய்வு நிறுவனங்கள், அபிவிருத்தி நிதியங்களை உருவாக்குவதற்கும் நாம் நடவடிக்கை எடுப்போம். நன்கு ஆராயப்பட்ட உத்திகளின் அடிப்படையிலேயே நாம் செயற்படவேண்டும். நிறுவனமயப்படுத்தப்பட்ட செயற்பாடுகளே எமக்கு இனி விடிவைக் கொண்டு வரும். யூதர்களின் நிறுவனமயப்படுத்தப்பட்ட செயற்பாடுகளே அவர்களின் இன்றைய மேன்மை நிலைக்கு காரணம். உலகம் முழுவதும் பணத்துடன் அறிவையும் அவர்கள் மூலதனம் இட்டதுதான் அவர்களின் வெற்றிக்கு வழிவகுத்தது. நாமும் இஸ்ரேலியர்களுக்கு சளைத்தவர்கள் அல்லர். எம்மாலும் முடியும் என்பதை நாம் உணரவேண்டும். எம்மேல் எமக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும்.

அதேவேளை, எமது அரசியல் மற்றும் பொருளாதார உரிமைகளை பெறுவதற்காக நாடாளுமன்ற அரசியலைக் காத்திரமான முறையில் நாம் மேற்கொள்வோம். ஆட்சியில் எந்த அரசாங்கம் இருந்தாலும் எமது மக்களின் நலன்களைக் கவனத்தில் கொள்ளாமல் அவற்றுக்கு நாம் ஒருபோதும் முண்டுகொடுக்க மாட்டோம். சந்தர்ப்பங்கள் கிடைத்தால் எமது மக்களின் நலன்களை முன்வைத்து நாம் பேரப்பேச்சுக்களில் ஈடுபடுவோம். உதாரணத்திற்கு ஜனாதிபதி தேர்தலில் ஆதரவு கோரி வந்தார்கள். சில நிபந்தனைகளை முன்வைத்தேன். தயங்கினார்கள். அப்படியானால் என்னால் உங்களுக்கு ஆதரவு தர முடியாது என்று கூறிவிட்டேன். சென்று விட்டார்கள். எமது சிந்தனையில் முதலில் வருவது எமது மக்களின் நலம். எமது எந்தப் பேரம் பேசலும், கருத்துப் பரிமாற்றமும் எம் மக்களின் நலன்களையே முன்வைத்து நிகழும்.

எமது நாடாளுமன்றப் பிரவேசம் மூலம் எடுக்கக்கூடிய அத்தனை வளங்களையும் உரிய முறையில் பயன்படுத்தி எமது மக்களை வலுவூட்டச் செய்யும் பொருளாதார நடவடிக்கைகளை நாம் சுயநலம் இன்றி மேற்கொள்வோம். அதேவேளை, எவ்வாறு எமது மக்களின் தற்சார்பு பொருளாதாரத்தை மேம்படுத்தலாம் என்பது பற்றி சிந்தித்து வருகின்றோம். இதற்கு எவ்வாறு வெளிநாடுகளையும் புலம்பெயர் தமிழ் மக்களையும் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற உத்திகளை ஆராய்ந்து வருகின்றோம். யுத்தம் நடைபெற்ற காலத்தில் வடக்கு கிழக்கில் பொருளாதாரத் தன்னிறைவை ஏற்படுத்த பெரிதும் பாடுபட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் முன்னாள் பொறுப்பாளர் ரூபன் எம்முடன் இணைந்துள்ளார். அவர் திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிடுகின்றார். எமது எதிர்கால பொருளாதார மேம்பாட்டு நடவடிக்கைகளில் அவர் முக்கிய பங்கு வகிப்பார். அவரிடம் மிகுந்த திறமையும் அனுபவமும் இருக்கின்றது. அதேபோல் எமது யாழ்ப்பாண, வன்னி மாவட்ட மற்றும் மட்டக்களப்பு வேட்பாளர்கள் பல தகைமைகளைக் கொண்டவர்கள். ஆசிரியர்கள், வங்கியாளர்கள், பொறியியலாளர்கள் என்று பலர் இருக்கின்றார்கள். இம்முறை தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியை வெற்றியடைச் செய்வதால் எமது மக்கள் பலத்த பயன் அடைவார்கள் என்பதைக் கூறி வைக்கின்றேன். தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முக்கியத்துவம் இன்று களை இழந்துள்ளதற்குக் காரணம் அவர்களின் சுயநல அரசியல். ஆகவே இம்முறை வீட்டை விட்டு விட்டு, சைக்கிளை விட்டு விட்டு, வீணையை விட்டு விட்டு, நீங்கள் மீனுக்கே வாக்களிக்க வேண்டும். மீன் ஆட்சி வர ஆதரவு தர வேண்டும்.

எமது மக்களின் உரிமைகளை அடைவதற்கான எமது அணுகுமுறை ஏனைய எல்லா கட்சிகளையும் விடவும் மாறுபட்டு காணப்படுகின்றது என்பதை நீங்கள் உணரவேண்டும். – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# இணைந்த வடக்குக் கிழக்குத்தான் தமிழ், முஸ்லிம்களுக்குப் பாதுகாப்பு

## காரணங்களை விளக்குகின்றார் சுகாஷ்



(பிரபாகரன் டிலக்சன்)

இணைந்த வடக்கு, கிழக்கே தமிழ், முஸ்லிம் சமூகத்துக்குப் பாதுகாப்பானது. சில நேரங்களில் முஸ்லிம் சகோதரர்கள் தமிழ் மக்களுக்கு எதிரான விடயங்களுக்கு அரசாங்கத்திற்கு ஆதரவு கொடுத்திருக்கிறார்கள். முஸ்லிம் சமூகத்தினரை அரசாங்கம் தமது தேவைக்குப் பயன்படுத்திவிட்டு கறிவேப்பிலையாக அகற்றி விடுவார்கள் எனத் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் யாழ் மாவட்ட வேட்பாளர் சுகாஷ் கனகரட்ணம் தெரிவித்தார்.

தமிழர்களுக்கு என்று தனித்துவமான, பூர்வீகமான பிரதேசம் ஏதும் இல்லை என்ற கிழக்கு மாகாண தொல்பொருள் பிரதேசங்களை பாதுகாப்பதற்கான ஜனாதிபதி செயலணி உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரரின் கருத்துத் தொடர்பில் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

தேரரின் கருத்தை முற்றிலுமாக நிராகரிக்கின்றோம். அத்துடன் வன்மையாகக் கண்டிக்கின்றோம். வடக்கும் கிழக்கும் தமிழர்களின் தாயகம் என்பதில் மாற்றுக் கருத்து இல்லை. கிழக்கு மாகாண ஜனாதிபதி செயலணி மூலம் முதலில் கிழக்கைப் பறிப்பதும் அடுத்ததாக வடக்கில் கைவைத்து படிப்படியாகதனையும் கபளீகரம் செய்வதே அவர்களின் நோக்கம் ஆகும். இதனையே நாம் கட்டமைக்கப்பட்ட இன அழிப்பு எனத் தொடர்ச்சியக்க வலியுறுத்தி வருகின்றோம்.

வடக்கும் கிழக்கும் பூர்வீக ரீதியாகத் தமிழர்களது தாயகம் என்பது வரலாற்று ரீதியாகவும் வரலாற்று நூல்கள் மூலமாகவும் அறியப்பட்ட விடயம். ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த போது தமிழ் ஈழ விடுதலைப் புலிகளோடு மேற்கொண்ட சமாதான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கூட விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள் தெளிவாக வரையறுக்கப்பட்டிருந்தன.

வரலாற்று ரீதியாகப் பார்க்கின்ற போது இலங்கைக்கு சிங்கள சகோதரர்கள் வருவதற்கு முன்னரே தமிழர்கள் குடியேறி இருந்தார்கள் என்பதற்கான ஆதாரங்கள் பல உள்ளன. இந்தத் தேர்தல் நேரத்தில் தேரர் இவ்வாறான கருத்தை முன் வைத்திருப்பது சிங்கள, பௌத்த இணவாதத்தினுடைய அதியுச்ச அகோர முகத்தை காட்டியிருக்கிறது.

உண்மையில் கிழக்கு ஜனாதிபதி செயலணி அமைக்கப்பட்டதன் நோக்கம் என்னவெனில் கிழக்கில் உள்ள தமிழர்களின் வரலாற்று ரீதியான இடங்களை அழித்து முழுவதுமாக சிங்கள பௌத்த மயமாக்குவதே ஆகும். தேரருடைய கருத்து ஜனாதிபதி செயலணி உருவாக்கியதன் நோக்கத்தையே வெளிப்படுத்து கிறது.

இந்த ஜனாதிபதி செயலணியை தமிழர்கள் மட்டுமல்லாது முஸ்லீம் சகோதரர்களும் இணைந்து ஒட்டுமொத்தமாக எதிர்க்க வேண்டும். கிழக்கு ஜனாதிபதி செயலணியினால் தமிழர்களுக்கு மட்டுமல்ல முஸ்லிம் சகோதர்களுக்குமே பாதிப்பு. ஆகவே இந்த விடயத்தை உணர்ந்துகொண்டு தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தின் இருப்பு கருதி வடக்கு, கிழக்கு தமிழ் மக்களும் முஸ்லிம்களும் ஒன்று சேர்ந்து இந்த ஜனாதிபதி செயலணியை எதிர்க்க வேண்டும்.- என்றார். (மு - 11)

# வவுனியா மோதல்களில் ஐந்து பேர் காயம்

வவுனியாவில் ஞாயிறு இரவு இடம்பெற்ற வாள் வெட்டு மற்றும் அடிதடி சம்பவங்களில் ஐந்து பேர் காயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். குறிப்பாக மகாறம்பைக்குளம்,பூந்தோட்டம், சிறிநகர் போன்ற பகுதிகளில் ஞாயிறு மாலை இந்த அடிதடி சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன எனக் கூறப்படுகின்றது.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்ட நிலையில் அவர்கள் விசாரணைகளை முன்னெடுத்துவருகின்றனர்.

கடந்த சிலநாள்களாக வவுனியாவில் வாள்வெட்டு மற்றும் இளைஞர் குழுக்களுக்கு இடையிலான அடிதடி சம்பவங்கள் அதிகரித்துவருகின்றமையுடன் அவற்றில் அதிகமானவை மதுபோதையில் இடம்பெறுகின்றமை குறிப்பிடதக்கது.

குறிப்பாக வீதிகளில் குழுக்களாக ஒன்று கூடும் இளைஞர்கள் இவ்வாறான சம்பவங்களில் ஈடுபடுகின்றனர். இதனால் வீதிகளில் பயணிக்கும் பொது மக்கள், முதியவர்களும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.



# எல்லை மீறிய பிக்குவை மரத்தில் கட்டி வைத்துத் தாக்கினார்களாம்

## அநுராதபுரம் பகுதியில் மூவர் கைது

அநுராதபுரம் - கஹட்டகஸ்திகிலிய, வஹாகஹாபுவெவ பிரதேசத்தில் உள்ள விகாரை ஒன்றின் விகாராதிபதியை பொல்லுகளால் தாக்கி, காயங்களை ஏற்படுத்தி, மரத்தில் கட்டி வைத்த சம்பவம் தொடர்பாக இராணுவச் சிப்பாய் ஒருவரின் உறவினர்களை பொலிஸார் நேற்று சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

கஹட்டகஸ்திகிலிய பொலிஸாருக்கு நேற்று கிடைத்த முறைப்பாடு ஒன்றுக்கு அமைய மூன்று சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தனிப்பட்ட பிரச்சினையை அடிப்படையாகக் கொண்டு பிக்கு மீது இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தாக்குதலில் காயமடைந்த எப்பாவல ரதனசிறி தேரரை பிரதேசவாசிகள் இணைந்து 1990 அம்புலன்ஸ் மூலம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். அவர் அநுராதபுரம் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

வஹாகஹாபுவெவ, கஹட்டகஸ்திகிலிய,திருகோணமலை வீதி பிரதேசத்தை சேர்ந்த 62,34 மற்றும் 32 வயதான சந்தேக நபர்களே இந்தச் சம்பவம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாக்குதலுக்கு உள்ளான தேரர், இராணுவத்தில் பணிப்புரியும் தமது உறவினரின் மனைவிக்கு அவ்வப்போது தொந்தரவு கொடுத்து வந்துள்ளார் எனவும் தமது கௌரவத்தைப் பாதுகாத்துக்கொண்டு விகாரையில் இருக்குமாறு தேரருக்கு பல முறை ஆலோசனை வழங்கிய போதிலும் அவர் நேற்று முன்தினம் மாலை எல்லை மீறியமையால், அவரைத் தாக்கியதாக சந்தேக நபர்கள் பொலிஸாரிடம் கூறியுள்ளனர்.

சந்தேக நபர்கள் நேற்று அநுராதபுரம் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட இருந்தார்.சந்தேக நபர்கள் நடத்திய தாக்குதல் குறித்து பொலிஸார் விரிவான விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

# மாலைதீவிலிருந்து 170 பேர் மீண்டனர்

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமான மாலைதீவில் சிக்கியிருந்த 170 இலங்கையர்கள் நேற்று நாடு திரும்பியுள்ளனர்.

ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான விஷேட விமானம் ஒன்றில் இவர்கள் அனைவரும் மத்தள விமானநிலையத்திற்கே அழைத்து வரப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் மத்தள விமான நிலையத்தில் வைத்து பீ.சீ.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

# முல்லைத்தீவில் தேர்தல் முறைப்பாட்டுப் பிரிவின் கண்காணிப்பின் கீழ் டக்ளஸின் கலந்துரையாடல்

(எஸ்.தவசீலன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் கடற்தொழில் நீரியல் வளத்தினைக்கள அமைச்சரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளருமான டக்ளஸ் தேவானந்தா முல்லைத்தீவு மாவட்டத்தில் மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் கடற்றொழில் அமைப்புக்களை சேர்ந்தவர்களை ஒன்றிணைத்து மாவட்ட செயலாளரது பங்குபற்றுதலுடன் கூட்டம் ஒன்றை நடத்தியுள்ளார்.

தேர்தல் திணைக்களத்தின் அனுமதியுடன், தேர்தல் திணைக்கள முறைப்பாட்டுப் பிரிவு அதிகாரிகளின் கண்காணிப்பின் கீழ் இந்த கூட்டம் நடைபெற்றுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட தேர்தல் திணைக்களம் தெரிவித்துள்ளது. டக்ளஸ் தேவானந்தாவின் கட்சியைப் பிரதிநிதித்துவப் படுத்தும் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த வேட்பாளர்கள் எவரும் கலந்து கொள்ளாத நிலையில் இந்த கூட்டம் நடத்த அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

முல்லைத்தீவு கரைத்துறைப்பற்று பிரதேச செயலகத்தில் நேற்று நடைபெற்ற கடற்றொழிலாளர்கள் சார் கலந்துரையாடலில் அமைச்சர் கருத்து வெளியிட்டார்.

இந்தக் கலந்துரையாடலில் வெளிச்சம் பாய்ச்சி மீன் பிடித்தலை தடை செய்தல், அனுமதிக்கப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி சுருக்கு வலைத் தொழிலில் ஈடுபட அனுமதித்தல், வெளி மாவட்ட மீனவர்களைக் கட்டுப்படுத்தல், கொக்குளாய் கடல் நீரேரியில் இயந்திர படகு பயன்படுத்தி மீன் பிடித்தலைத் தடை செய்தல், உள்ளூர் மீனவர்களுக்குக் கடலட்டை பிடிக்கும் அனுமதி வழங்கல், கரைவலை தொழிலில் ஈடுபடுவோருக்கு நிரந்தர அனுமதி வழங்கல், நந்திக் கடல் மற்றும் நாயாறு போன்ற நீர் நிலைகளைப் புனரமைத்தல் உட்பட முல்லைத்தீவு மீனவர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டன எனத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவற்றில் பெரும்பாலானவற்றிற்கு சுமூகமான தீர்வு காணப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

மேலும் சுருக்கு வலைப் பயன்பாடு போன்ற தீர்வு காணப்படாத விடயங்களுக்கு அடுத்த வாரமளவில் மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் கடற்றொழில் திணைக்களத்தின் முல்லைத்தீவு உதவிப் பணிப்பாளர் ஆகியோர் தலைமையில் கூடி ஆராய்ந்து பெரும்பாலானவர்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்து சமூகமான தீர்வினை காணுமாறு தாம் அறிவுறுத்தியுள்ளார் எனவும் தெரிவித்தார்.

தற்போதைய அரசின் காலத்திலும் சரி, அதற்கு முந்தைய காலத்திலும் சரி, நல்லாட்சி அரசாங்கம் இருக்கும் போதும் சரி முல்லைத்தீவு மாவட்ட மீனவர்கள் பிரச்சினை தொடர்பில் ஆராயப்பட்டு வந்துள்ளதே தவிர எந்த முடிவுகளும் நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. மாவட்ட அபிவிருத்திக் குழுவிலும் பல தடவைகள் எடுத்துரைக்கப்பட்டும் மீனவர்கள் பிரச்சினை இதுவரை தீர்த்துவைக்கப்படாத ஒன்றாகத் தொடர்ந்து செல்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.06.2020 இல் வெளியிடப்பெற்றது.